# காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

7—11—71

★

உள்ளே......


பொதுமை உணர்வு தேவை (தலையங்கம்)

நந்திக்கலம்பகத்தில் அழகு (இலக்கியம்)

வானுலகில் இராசராசன் (அப்போலோ)

புண்ணியவதி (சிறுகதை)

சோழமாதேவி (தொடர்கதை)


விலை 20 காசு



முதல்வர் கலைஞர் அவர்கள் தீட்டிய 'சிலப்பதிகாரம்' நாடகத்திற்கு ஆளுநர் கே. கே. ஷா அவர்கள் தலைமைதாங்கி கலைஞருக்குப் பொன்னுடை போர்த்துகிறார்.

**மிஸ்டர் அப்போலோவின் அரசியல் பேட்டி!**

# வானுலகில் இராசராசன்!

தஞ்சாவூரில் நடைபெற்று முடிந்த ராஜராஜ சோழனின் பெருமை விளக்கும் விழாவில் கலந்துகொள்ள வேண்டும் என்று துடியாய்த் துடித்துத் தோல்வியைத் தழுவிக்கொண்ட மிஸ்டர் அப்போலோவுக்கு, விழாவைத்தான் காண முடியவில்லை; ராஜராஜனையாவது சென்று சந்தித்து வரலாம் என்ற ஆசை ஏற்பட்டுவிட்டது.

கி. பி. 11-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவனாயிற்றே ராஜராஜன்; அவன் இயல், இசை, கூத்து ஆகிய முத்தமிழையும் போற்றிக் காத்து வளர்த்தவனாயிற்றே; ஜெயங்கொண்டாரால் பரணி பாடப்பெற்ற குலோத்துங்கனை நாட்டுக்குப்பெற்றுக்கொடுத்தவனாயிற்றே! அவ்வளவு சிறப்புக்குரியவனை 'சொர்க்க லோகத்தில்' சென்று சந்திப்பதா? இல்லை, நரகத்துக்குப் போவதா? என்பதில் வழக்கம் போல் சந்தேகம் ஏற்பட்டுவிட்டது. என்றாலும் முதலில் சொர்க்கத்துக்கே போகலாம்; அங்கே சந்திக்க முடியவில்லையானால் நரகத்துக்குச் சென்று தேடலாம் என்று நினைத்துக் கொண்டு பறக்கத் தொடங்கினார்.

மேலேமேலே போய்க்கொண்டே இருக்கும்போது ஒரு சந்தேகம் வந்துவிட்டது. இறந்தவர்களது ஆவி, ஒரு நெருப்பாற்றை மயிரிழையின் மீது கடந்துதான் அப்பால் செல்லவேண்டும் என்று பூமியில் புராணப் புளுகர்கள் சொல்லுவார்களே, நமக்கும் அதுபோன்ற அனுபவம்ஏற்பட்டுவிடுமோ என்று எண்ணினார். தான் சாகவில்லையே, அதனால் அந்த சந்தர்ப்பம் தனக்கு ஏற்படாது என்ற திருப்தி ஏற்பட்டது. எனினும், மயிரிழையின்மீது நடக்கும் வாய்ப்பில்லையென்றாலும் நெருப்பாற்றையாவது ஒருமுறை கண்ணால் கண்டுவிடவேண்டும் என்று விரும்பியது அவரது மனம். அதுபற்றி அவர் அசைபோட்டுக் கொண்டிருக்கும் போதே, அவரது உடல் பற்றி எரியத் தொடங்கி விட்டது. திகைத்துப் போன அப்போலோ, இப்போது நெருப்பாற்றைத்தான் கடக்கிறோமா என்று நினைத்துப் பார்த்து ஏமாற்றமடைந்தது. எதிரே சூரியன், எரி நெருப்புக் கண்களுடன் குதிரைகள் பூட்டிய தேரில் கடுவேகமாகப் போய்க்கொண்டிருந்தான். உடல் உஷ்ணமடைந்ததன் காரணத்தை புரிந்துகொண்டவுடனேயே அப்போலோவுக்கு சிரிப்புவந்துவிட்டது. வாயை மூடிக்கொண்டு, உதட்டைக் கடித்துக்கொண்டு தனக்குள்ளேயே சிரித்துக்கொண்டார் அவர்.

சற்றைநேரத்துக்கெல்லாம் எமலோகத்துக்கு வந்து சேர்ந்தார் அப்போலோ. சித்திரபுத்திரனை முதலில் சந்தித்து விசாரித்துத் தெரிந்து கொள்ளலாம் என்று கருதி, அவருக்கருகே சென்று பணிவுடன் நின்று, தன்னை அறிமுகம் செய்துகொண்டு. "ஐயா சித்திராபுத்திரரே!' கி.பி. 11-ஆம்நூற்றாண்டில் இங்கே எமராஜருக்கு பிரதம காரியதரிசி பதவியில் இருந்தவர் யார் என்று தெரிந்துகொள்ளலாமா?" என்றார்.

சித்திராபுத்திரனுக்குத் தூக்கி வாரிப்போட்டு விட்டது! உலகம், தோன்றி, வளர்ந்து. கடவுள்களும் கடவுள்களுக்கு மனைவி மக்களும், வாழ்வும், தாழ்வும், சோதனையும் விமோசனங்களும் என்றெல்லாம் நிர்ணயிக்கப்பெற்று, அந்த நியதிப்படியே பதவியில் அமர்ந்த எமதர்மனும், அவரது பிரதம செயலாளராகத் தானும்தான் இருப்பதாக இது வரையில் எண்ணிக்கொண்டிருந்தவர் சித்திராபுத்திரன். அப்படியிருக்க மிஸ்டர் அப்போலோ கேட்ட கேள்வியை நினைத்ததும், அவரை அறியாமலேயே எமராஜன், அப்படி யாரை யாவது நியமித்திருக்கக் கூடுமோ என்று கருதினார். எப்படியானாலும் அது தனக்குத் தெரியாமலிருக்க முடியாதே என்று நினைத்துக் கொண்டே பழைய சுவடிகளையெடுத்துப் புரட்டத் தொடங்கிவிட்டார். கைகள் களைத்தனவேயொழிய கருத்துக்குத் தெளிவேற்படவில்லை. "மிஸ்டர் அப்போலோ! உங்கள் கேள்விக்குப் பதில். அப்படி யாரும் இங்கே இல்லை" என்பதுதான் என்றார்!

"11-ஆம் நூற்றாண்டில் இங்கே எமராஜனே இல்லையென்கிறீர்களச?" என்று திருப்பிக் கேட்டார் அப்போலோ. சித்திராபுத்திரனுக்கு மறுபடியும் குழப்பம். மறுபடியும் புரட்டத்தொடங்கி, வெகு நேரத்துக்குப் பிறகு "ஆமாம்!" என்றார்.

அப்போலோவுக்கு வியப்புத் தாங்க முடியவில்லை. "11-ஆம் நூற்றாண்டில் எமலோகமும் இல்லை; நீங்களும் இல்லையா?" என்றார் மீண்டும்.

"என்ன என்ன! எமலோகமே இல்லையென்று எப்போது நான் சொன்னேன்? அண்டம் கருவான நாள் முதல், கருகத் தொடங்கி இருக்கும் இந்த நாள் வரையில் எம தர்பார் இருந்தது; நானும் இருக்கிறேனே!" என்றார்.

சரியான லூஸ்ஒன்றைப் பிடித்து இந்த போஸ்டில் உட்கார வைத்திருக்கிறானே எமன், அவன் ஒரு பைத்தியக்காரன் என்று தனக்குள் எண்ணிக்கொண்டு, மிஸ்டர் சித்ராபுத்ரன்! கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் இராஜராஜன் என்று ஒரு மன்னன் இருந்தான். அப்புறம் செத்துப் போய்விட்டான். அவனைத் தேடிக் கொண்டுதான் இங்கே வந்தேன். அவனை அவசியம் நான் சந்திக்க வேண்டும். ஏற்பாடுசெய்ய முடியுமா?" என்றார் அப்போலோ.

"ஓகோ, விஷயம் அப்படியா! முதலிலேயே அப்படிச் சொல்லி இருக்கக்கூடாதா? மிஸ்டர், நேற்றைக்கு வந்தவர்கள் யார் யார் எங்கே இருக்கிறார்கள் என்பதற்கே சரியான கணக்கு இங்கே இல்லை. ஆயிரம் ஆண்டுகளுக்குமுன்பு வந்தவனைப் பற்றிக் கேட்கிறீர்களே, எப்படி முடியும்?" என்றான் சித்திராபுத்திரன்.

"இப்போதெல்லாம் நீங்கள் ரொம்பவும் கெட்டுப் போய்விட்டீர்கள்! மனமும், இதயம் சீர்குலைந்துப்போய் இருக்கிறது. அதனால் இன்றையகணக்குகள் வெறும் பேத்தலாகி இருக்கலாம். அன்றைக்கு அப்படியில்லையே! மனம், வாக்கு, காயம் அனைத்துமே தூய்மையாக இருந்தன என்று எங்கள் நாட்டுப் புலவர்கள்

(4-ஆம் பக்கம் பார்க்க)



# காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

ஆண்டு சந்தா ரூ. 10 ஆறு மாத சந்தா ரூ. 5

மலர் 8 | 7—11—71 | இதழ் 17


# பொதுமை உணர்வு தேவை!

இந்திய எல்லையில், பதட்டநிலை மிகுந்து கொண்டே இருக்கிறது. இதைப்பற்றி பிரதமர் இந்திராகாந்தி எடுத்துக்காட்டும்போது "எரிமலையின்மீது உட்கார்ந்திருக்கிறேன். என்று வெடிக்குமோ தெரியாது" என்று இலண்டனில் பேசி இருப்பது அசாதாரணமானதல்ல.

திரிபுரா எல்லையில் மட்டுமல்லாது, மேகாலயா எல்லையிலும், பீரங்கிகொண்டு பாகிஸ்தான் தாக்கி இருக்கிறது. கிழக்கு வங்காளத்தையடுத்த இந்திய எல்லைக் கிராமங்களிலும் பாகிஸ்தான் தாக்குதலைத் தொடங்கிவிட்டது. இந்தியப் பாதுகாப்புப் படையினர், திருப்பித் தாக்கும்போது, பாக். படையினர் ஓடி ஒளிவதும், பிறகு மீண்டும் வந்து துப்பாக்கியால் சுடுவதும், மறுபடியும் இந்தியப் படையினர் எதிர்த் தாக்குதல் நடத்துவதும், மறுபடியும் ஓடுவதும் என்று "கண்ணாம்பூச்சி" விளையாட்டு விளையாடிக் கொண்டிருக்கத் தொடங்கிவிட்டது யாகியாவின் போர் வெறி.

இந்திய அரசின் பாதுகாப்பு அமைச்சகம், பாகிஸ்தானின் தாக்குதலை முறியடிப்போம் என்றும், தாக்குதல் மிகுமானால் பாகிஸ்தான் மண்ணுக்கேச் சென்று திருப்பித் தாக்கப்படும் என்றும் செய்தி தந்திருப்பதைப் படிக்கும்போது, வீரம் கொப்பளிக்கிறது; கூன்விழுந்த நெஞ்சுகள்கூட கொஞ்சம் நிமிர்ந்து நிற்கும் என்ற நம்பிக்கை பிறக்கிறது.

அதே வேளையில் பாகிஸ்தானுடைய 'கண்ணாம்பூச்சி' விளையாட்டை, ஒரேயடியாகத் தாக்கித் தகர்த்தது என்ற இந்தியச் செய்தியினைப் பார்க்க முடியுவில்லை. ஒருகால், எந்த வகையிலும் இந்தியாமீது பழிவந்து சேர்ந்துவிடக் கூடாது என்பதற்கு முன்னெச்சரிக்கை மிகுந்த நடவடிக்கைகள், இப்படித்தானிருக்க வேண்டும் என்று இந்திய அரசு நினைத்துக் கொண்டிருக்கிறதோ, என்னவோ!

எப்படியானாலும், ஒருமுறை மறு தாக்குதலுக்காளான எதிரிப்படைகள், மீண்டும் அந்தப் பகுதியில் தாக்குதல் நடத்த முடியாதநிலையை, இந்தச் சிறுசிறு தாக்குதல்கள் மூலமேகூட இந்தியா உண்டாக்கிவிடுமானால், அது பெரும் போர் மூளக்கூடும் என்ற அச்சத்துக்குக் காரணமில்லாமற் செய்துவிடக்கூடும்.

இந்தியா, பதிலுக்குப் பதில் என்ற முறையில் தான் அங்கங்கே தாக்கிக்கொண்டிருக்கிறதேயொழிய, முதல் தாக்குதல் இந்தியாவினால்தான் என்று எவரும் சொல்லமாட்டார்கள், பாகிஸ்தான் தரப்பைத் தவிர. அப்படியிருக்கும்போது, பதில் தாக்குதலே பயங்கரமான அளவுக்கு என்று மாறிவிட்டால், அப்புறம் இந்தக் 'கண்ணாம்பூச்சி' விளையாட்டுக்களுக்கு இடமிராது என்பது பொது நம்பிக்கை.

நாட்டின் பொதுவான நிலைமை இப்படி இருக்கும்போது, உள்நாட்டில், வந்து புகுந்துள்ள அகதிகள் பெருக்கம் காரணமாகவும், அவர்களது நலவாழ்வுக்காக இந்திய அரசு மேற்கொள்ளும் சில நடவடிக்கைகள் காரணமாகவும், உணவுப் பண்ட விலைகள் மட்டுமல்லாமல், எல்லா தரப்பட்ட தேவைப் பொருள்களின் விலையும், ஒரு வரம்பையும் கடந்து உயர்ந்துகொண்டே போகிறது.

யுத்த பீதி காரணமாக, ஒரு நெருக்கடி நிலை தோன்றும்போது விலைகள் இதுபோல் கிடுகிடுவென உயர்வது என்பது எதிர்பார்க்கக் கூடியதுதானென்றாலும், இப்போதைய விலை உயர்வைப் பரிசீலிக்கும்போது, யுத்த பீதி மட்டுமே காரணம் என்று சொல்லிவிட முடியவில்லை.

பண்டங்கள் தட்டுப்பாடு ஏற்படும்போதும், உற்பத்திக் குறைவு ஏற்படும்போதும் விலைகள் உயர்வது சகஜம்தான் என்றாலும், அனைத்திந்திய மட்டத்தில் இந்த நிலையை ஆய்வு செய்து பார்க்கும்போது, நாடெங்கும் விலை உயர்வுப் பிரச்னை என்பது ஒரு நோய்போல் பரவி இருக்கிறது என்றுதான் எண்ணத் தோன்றுகிறது.

வணிகத் துறையினர், அந்தத் துறையில் ஈடுபாடு கொள்வதன் அடிப்படைக் காரணமே, லாப நோக்குதான் என்று ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதுடன், லாப நோக்கின்றி வணிகத் துறை இயங்கவும் முடியாது என்பதும் ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கிறது.

ஆனால், ஒரு பொருளுக்கு இன்று ஒரு விலை; இன்னும் ஒரு மணி நேரம் கழித்து ஒரு விலை. நாளைக்கு ஒரு விலை என்பதற்கு வணிகத் துறையின் பொருளாதாரக் கண்ணோட்டமும், கணக்கும் என்ன என்று புரிந்துகொள்ள முடியவில்லை. வெறும் லாப நோக்கம் மட்டும்தான் வணிகத் துறை என்று இயங்கத் தொடங்கி விட்டதோ என்று எண்ணிக் கவலைப்பட வேண்டியதிருக்கிறது.

சில நாட்களுக்கு முன் மத்திய அமைச்சர் ஒருவர், விலை உயர்வுகளுக்கு வரிக் கொள்கைகள் காரணமே அல்லவென்றும், விநியோக முறையில் உள்ள தவறுகளே அவற்றுக்குக் காரணமாக இருக்க வேண்டும் என்றும், மாநில அரசுகள் அதனைச் சீர்படுத்திக்கொண்டால் விலைகள் உயர வழி இராது என்றும் பேசி இருக்கிறார்.

விலை உயர்வுகளைப் பற்றி வணிகத் துறையினர் கருத்தறிவிக்கும்போது, அரசின் வரிக் கொள்கைகளால்தான் பண்ட விலைகள் ஏறுகின்றன என்று எடுத்துக் காட்டுகிறார்கள்.

பொருளாதார வல்லுநர்களோ. அரசாங்கத்தின் கொள்கைகள் காரணம் என்று கூறுகிறார்கள்.

இவை அனைத்தையும் தாண்டி, ஒன்றை வாங்க வேண்டிய நிலையிலிருப்பவன், தன்னால் அதை நியாய விலைக்கு வாங்க முடியவில்லையேயென அங்கலாய்க்கிறான்.

இராணுவ முஸ்தீபுகளுடன் போர்க் காரியங்களில் முனைப்புக் காட்டுவது என்பது எவ்வளவு அவசரமோ, அந்த அளவுக்கு அவசரமும், முக்கியத்துவமும் உடையதுதான் விலைகளின் கட்டுப்பாட்டுக்கு ஒரு பயன்தரத்தக்க வழியைக் கண்டுபிடித்துச் செயல்படுத்துவதுமாகும்.

இவை, எல்லா தரப்பிலும் ஒருமித்த கருத்துடன் செயல்பட வேண்டிய ஒன்றே ஒழிய, சில எதிர்க் கட்சியினரின் போராட்டத்துக்குரிய "மூலப் பொருள்" அல்ல என்பதையும் நாடு உணர வேண்டியது முக்கியம். ☙

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

எல்லாம்கூட எழுதி வைத்திருக்கிறார்கள். அதனால், அந்தக் காலத்துக் கணக்குச் சரியாகவே இருக்கக்கூடும்-தேடிப் பாருங்கள்" என்றார் அப்போலோ.

"போய்யா போ, கணக்கைத் தேடுவதைவிட, அந்த ஆளையே தேடுவோம் வா!" — என்று இருவருமாக எழுந்து தேடத் தொடங்கினார்கள்,

எமராஜனுடைய எல்லையை ஒட்டிய எல்லாப் பகுதியையும் தேடிவிட்டு, களைத்துப்போன சித்ராபுத்ரன் சோர்ந்துபோய், "இனி என்னால் தேட முடியாது. மகாவிஷ்ணுவின் கண்காணிப்பில் இருக்கும் சொர்க்கத்துக்குப் போ!" என்றான்.

"அப்படிச் சொல்லக் கூடாது. எனக்கு அங்கெல்லாம் பாதை சரியாகத் தெரியாது. இதற்குமுன்பும் நான் இந்தப் பக்கம் வந்ததில்லை. கூட வாருங்கள்"—என்று கெஞ்சினார் அப்போலோ!

"சரியான ஓட்டை மிஸ்டர் நீங்கள்!" என்று கூறிக் கொண்டே, இருங்கள், எமராஜனுடைய வாகனத்தை ஓட்டி வருகிறேன்; அதிலேயே இருவரும் போகலாம் என்று கூறி, சற்றுநேரத்துக்கெல்லாம் ஒரு எருமை மாட்டை ஓட்டுக்கொண்டு வந்து சேர்ந்தார். அப்போலோவும் அதில் ஏறிக்கொண்டதும், எப்படியோ சொர்க்க உலகம் முழுவதையும் சுற்றிப் பார்த்து விட்டார்கள் இருவரும்!

அங்கே, காந்தியைக் கண்டனர்; நேருவைக் கண்டனர்; கென்னடியைக் கண்டனர். சாஸ்திரியைக் கண்டனர். அண்ணாவையும் கண்டனர். இன்னும் யாராரையோ கண்டனர். தேடிச் சென்ற இராசராசனை மட்டும் காணவில்லை.

மிஸ்டர் அப்போலோவுக்கு ஏமாற்றமாகி விட்டது. இராசராசனைக் காணவே முடியாதோ! சொர்க்கம் — நரகம் அல்லாத வேறு உலகம் ஏதாவது இருக்கிறதோ என்று எண்ணி, அது பற்றி சித்திராபுத்திரனிடம் கேட்டும் விட்டார்!

அதுபற்றி அவருக்கும் சந்தேகம்தான்! சந்தேகத்தை வெளிப்படையாகக் கூறமுடியாமல் விழித்தார். அப்போது நரகப் பாதையிலிருந்து வெங்காஜி என்பவர் வந்துகொண்டிருந்தார். அவரைப் பார்த்ததுமே அப்போலோவுக்குச் சிரிப்பு வந்துவிட்டது. நன்கு மழித்த தலையின் பின்புறம் ஏழெட்டு மயிர்கள் மட்டுமே காற்றில் பறந்து கொண்டிருந்தது. தலை வழுக்கையைத் தழுவிக் கொண்டிருந்த நெற்றியிலும், மற்றும் உடம்பு பூராவும் திருநீறு பூசப்பட்டு, கோரமாகக் காட்சி தந்தார் அவர்.

மார்பின் குறுக்கே பூணூல் ஒன்று கிடந்தது. அழுக்கேறிக் கிடந்த அதனை எடுத்து முதுகைத் தேய்த்துவிட்டுக் கொண்டார் வெங்காஜி!

அவரைப் பார்த்து அப்போலோ கேட்டார்:

"உங்களுக்கு மிஸ்டர் இராசராசனைத் தெரியுமோ?"

"எந்த இராசராஜன்? தஞ்சாவூர் அரசனா?"

"ஆமாம்!"

"எனக்கு முன்பே இங்கு வந்துவிட்டானே!"

"அது தெரியும் எனக்கு? நீங்கள் அவனைப் பார்த்தீர்களா இங்கே?"

"பார்க்கவில்லை; பார்த்ததும் இல்லை! ஆனால் அவனைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன்?"

"என்ன கேள்விப்பட்டீர்கள்?"

"அவன், பிரகதீஸ்வரர் கோயிலை தானும், தன் அரச குடும்பமும் மட்டுமே வழிபடக் கூடியதாக வைத்திருந்தான். என் போன்ற ஆரியர்களுக்கு அவன், அங்கே முக்கியத்துவம் கொடுக்கவில்லை; ஆரிய மானியங்கள் கொடுக்கவில்லை; சொல்லப்போனால், ஆரியத்துக்கு எதிராக இருந்தான் என்றுதான் சொல்லவேண்டும்! அதனால்......"

"அதனால்......"

"அதனால் இராசராசனுக்கு முன்பே இங்கு வந்தவர்கள் அவன் மீது கொண்டிருந்த ஆத்திரத்தால்......"

"ஆத்திரத்தால்..."

"பழி தீர்த்துக் கொண்டார்களாம், இங்கே வந்து சேர்ந்ததும்!"

"ஆ" என்று அலறிவிட்டார்கள் மிஸ்டர் அப்போலோவும், சித்திராபுத்திரனும்! சமாளித்துக்கொண்டு "பழி தீர்த்துக் கொண்டார்களா? எப்படி?" என்றார் அப்போலோ!

"இராசஇராசனின் உடம்பை, துண்டு துண்டாக வெட்டி, நரகப் பாதையின் தொடக்கத்திலிருந்து சொர்க்கப் பாதையின் முடிவு வரையில் போட்டுவிட்டார்களாம்! அவற்றை நாய், நரிகள், பேய் கழுகுத் தின்றுத் தீர்த்துவிட்டனவாம்!"

"இங்கே ஆவிதானேவருகிறது?" —என்றார் சித்திராபுத்திரன் குறுக்கிட்டு!

"ஆவியானால் என்ன? அதையும் கூட கொன்றுபோடும் ஆற்றல் எங்களுக்கு உண்டு!"

"அப்படியா!" — என்று வார்த்தைகள் உதிர்ந்தன. அந்த ஒலி அடங்கு முன் தலை தெறிக்க ஓடிக் கொண்டிருந்தார் அப்போலோ!

—திருவாரூர். முத்துராமன்.

---

(11-ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடியற்காலை நான்குமணி இருக்கும்.

மங்கம்மாவின் நினைவு...!!

"சுற்றிலும் பெண்கள் 'அய்யோ மகளே! உனக்கா இந்த கதி' என்று அழுகிறார்கள். வெளியே சங்கு ஊதப்படுகிறது. அந்த நேரம் வந்தது; ஒரு முதியவள் தலையிலிருந்து பூவை எடுக்கிறாள்; குங்குமத்தை அழிக்கிறாள்; வளையல்களை உடைக்கிறாள். கழுத்தில் இருந்த தாலி இறக்கப்படுகிறது. அண்ணன் முறைகொண்ட ஒருவன் கழுத்திற்குப் புடவைப் போடுகிறான்."

"அம்மா......!!"

நல்லவேளை; தன்னை மறந்து மங்கம்மா அலறியது யாருக்குமே கேட்டிருக்க முடியாது.

அதே நேரத்தில்...!!

மங்கம்மாவின் கையில் சரடோடு கூடிய தாலி இருந்தது.

அன்றைய காலைப்பொழுது, "குப்பத்தில் மங்கம்மா இல்லையாமே; எங்கோ போயிட்டாங்களாமே; புண்ணியவதி எங்கே போனாங்களோ" என்ற கூக்குரலோடு விடிந்தது.

எப்படியோ...!!

அப்போதும், அந்தக் குப்பத்து மக்களுக்கு மங்கம்மா புண்ணியவதியாகவே பட்டாள்.

அதுதானே மங்கம்மாவின் ஆசை.

★

# சோழமாதேவி

ராஜிமணாளன்



## [30]

## விளையப்போகிறது விபரீதம்!

விஜிதபுரம் சென்று திரும்பிய விகாரதேவி சொன்ன செய்திகளால், மனம் மகிழ்ந்த எள்ளாளர், ரோகணுவின் போர்வெறியை, எல்லா முனையிலும் கட்டுப்படுத்தியாகிவிட்டது என்று தன்னுள் நினைந்து புளகாங்கிதமடைந்தார்.

விஜிதபுரம் கோட்டையின் தலைவன் வீரபாகு பெண் பித்தம் பிடித்தவன் என்ற செய்தி ஏற்கெனவே காகவனதிசருக்குத் தெரிந்திருந்ததனால்தான், தன் மனைவியின் சாகசத்தில் அவன் ஏமாந்து போகக்கூடும் என்று இருந்த சந்தேகத்தையும், அந்தப் பயணம் உறுதி செய்துவிட்டது. வீரபாகு ஏமாறவில்லை. அதனால் அவனது உதவி, விகாரதேவிக்குக் கிடைக்கப்போவதில்லை!

மகாகாமாவை விட்டுக் கிளம்பிய இரு கிழமைகளுக்குப் பிறகுதான், வீரபாகுவிடமிருந்து செய்தி விகாரதேவிக்குக் கிடைத்தது. கிடைத்த செய்தியோ, அவள் உள்ளத்தை உலுக்கி வைத்துவிட்டது!

விகாரதேவி, விஜிதபுரம் போய்ச் சேர்ந்தபோது, வீரபாகு கோட்டையில் இல்லை. மனு மன்னரின் அழைப்புக் கேட்டு, அவன் அனுராதபுரம் வந்திருந்தான்.

அங்கே அவன் ஒரு கிழமைகள் வரையிலும் தங்கும்படி யாகிவிட்டது. தனது பகுதியிலிருந்து கள்ளத்தனமாக போர்க் கருவிகள் தயாராகின்றன; அதுவும் ரோகணுவுக்காக — விகாரதேவியின் போர் வெறித் தாக்குதல்களுக்காக என்று அறிந்து அவன் ஆத்திரத்தின் உச்சிக்கே போய்விட்டான்.

தம்பளை குகைக் கோயிலுக்குள்ளிருந்து பறிமுதல் செய்து, அனுராதபுரம் பாசறையில் கொண்டு வந்து குவிக்கப்பட்டிருந்த ஆயுதங்களை யெல்லாம் பார்வையிட்ட பிறகு, காதல் கனிந்திருந்த அவனது இதயத்தில் கனல் மூண்டுவிட்டது. அந்த எண்ணத்தோடு வீரபாகு, விகாரதேவியைப்பற்றி நினைக்கத் தொடங்கியதும், அவள் ஒரு சாகசக்காரி; ஏமாற்றுக்காரி; வஞ்சகியென்றெல்லாம் வாய்விட்டு சொற்களை உகுத்து வந்திருக்கிறான்.

அதுமட்டுமல்லாமல், நந்திமித்திரனும், கமணனும்ஆப்கனிஸ்தானத்துக்கு, ஒரு கிரேக்கனின் படை உதவியைக் கேட்கப் போயிருக்கிறார்கள் என்று அறிந்துகொண்டபோது, எத்தனை அற்பத்தனமான ஈன புத்திக்குச் சொந்தக்காரர்களாகி விட்டார்கள் ரோகண நாட்டார் என்று, காரி உமிழ்ந்திருக்கிறான்.

போர் தொடங்கட்டும்—தக்கபடி புத்தி புகட்டுகிறேன் என்று சூள் எடுத்துக்கொண்டு, அனுராதபுரத்திலிருந்து திரும்பியதும், அங்கே விகாரதேவி, தன் வருகைக்காகக் காத்திருக்கிறாள் என்று செய்தி கிடைத்தால், அந்தச் செய்தியை செவிமடுத்த அவனது இதயத்தில் இன்பமா சுரக்கும்?

"பார்க்கமுடியாது — பார்க்க விரும்பவில்லை— சந்திக்கவே முடியாது" என்று பதில் சொல்லிவிட்டான். இந்தச் செய்தியைப் பெறத்தானா தனக்குப் பதினைந்து நாட்கள் தேவைப்பட்டன என்று அவளே தன்னை நொந்துகொண்டு திரும்பினாள்.

அவள் திரும்பும் முன்பு, தன் வெட்கத்தையும் விட்டு, சொல்லி அனுப்பினாள்—இல்லை; ஓலை கொடுத்தனுப்பினாள்!

> இதயங் கவர்ந்தவரே!
>
> மகாகாமாவுக்குத் தாங்கள் மாற்றுருக்கொண்டு வந்து தங்கி இருந்ததுபோலவே இப்போது நான் தங்கள் காதலுக்காக இங்கு வந்து காத்திருக்கிறேன். நெருப்பாகக் கனன்றுகொண்டிருக்கும் என் இதயத்தை குளிர்விக்கும் கோடை நிலவான தங்களை எப்படியும் சந்திக்கவேண்டும்; உரமேறிய தங்கள் பனைத்தோளில் ஒரு பைங்கிளியைப்போல் தொத்திக்கொள்ள வேண்டும் என்றுதான் காத்திருக்கிறேன். தங்கள் கரங்கள் என் மேனியில் பாவாத காரணத்தால் பசலை படர்ந்துபோய்விட்டிருக்கின்றன. பரந்த என் மேனியைப் பக்குவப் படுத்தி பாகருந்த ஓடி வாருங்கள் என்று அன்பழைப்பு விடுக்கிறேன். வாருங்கள் கண்ணாளா! வந்து என்னைத் தழுவி இன்பம் தாருங்கள் கண்ணாளா!

—என்று எழுதினாள்! என்றாலும் என்ன? அந்த ஓலையைப் படித்தபோது, வீரபாகுவின் மூளை, அதனைக் காதல் முடங்கல் என்று ஏற்றுக் கொள்ளவில்லை. சதித் திட்டத்தின் ஓர் சாகசம் என்று கருதியது!

ஓலையைப் பெற்றுக்கொண்டவன் வாய்மொழியாகவே பதில் சொல்லி அனுப்பினான். "களங்கப்பட்ட மேனியைத் தீண்டி, என்னைக் களங்கப்படுத்திக் கொள்ள விரும்பவில்லை என்று சொல்! களங்கத்தை இதயத்தில், ஏந்திக்கொண் டிருப்பவளின் காதல், எனக்குத் தேவை இல்லை என்று சொல்! என்று சொல்லி அனுப்பிவிட்டானே!

இவ்வளவு விவரத்தையும் விகாரதேவி, மன்னரிடம் சொல்லவில்லை என்பது உண்மைதான்! அவள் சொன்னது, "தன்னைச் சந்திக்கவே முடியாது; போர் முகத்தில் சந்திக்கலாம்!" என்றுதானே! அந்த அளவு செய்திதானே காகவனதீசருக்கும் தேவை!

இந்தச் செய்தி மன்னருக்குத் தித்தித்தது! ஆனால் விகாரதேவிக்கு? சம்மட்டிகொண்டு இதயத்தைத் தாக்கிவிட்டிருக்கிறான் வீரபாகு! தாக்குண்ட

அந்த இதயத்தில் தீகவாபியைப் பற்றிய எந்தச் செய்தியைச் சொன்னாலும் தங்குமா? தங்க முடியவில்லையே!

நல்லவேளையாக, ஆப்கனிஸ்தான் சென்றிருந்த கமணனும், நந்திமித்திரனும் திரும்பிக்கொண்டிருக்கிறார்கள்; இலங்கைக் கரையின், அருகே ஜலசந்தியில் நுழைந்துகொண்டிருக்கிறார்கள் என்ற செய்தியால், அவள் நிலைகுலையாமல் மீண்டாள்.

அடேயப்பா! விகாரதேவிக்கு இப்படியும்கூட ஒரு மனமா? அது மெழுகாகக்கூட இருக்க முடிந்த இதயமா? புதுமைகள் பூக்கத் தொடங்கிவிடும்போது, பழமைகள்கூட புதுமைப் போர்வைகள் போட்டுக் கொள்ள முனைவதுபோன்றதோ இதுவும்? யாருக்குத் தெரியும்! தாலிகட்டி, மனைவியென்று சுவைத்து வாழ்க்கை நடாத்திக் கொண்டிருக்கும் காகவனதீசருக்கே இவை புரியாதபோது, நமக்குமட்டும்...?

ஃ ஃ ஃ

கமணன் திரும்பிவிட்டான் என்ற செய்தி விகாரதேவிக்குக் கிடைத்த அதே நேரத்திலேயே மன்னருக்கும் கிடைத்தது. அதுபோலவே, கல்யாணியிலிருந்த சிற்றிளவரசன் தீசனுக்கும் கிடைத்தது.

கமணனது வருகையால், விகாரதேவியின் மனநிலையை மாற்றிவிட முடியும் என்று எண்ணி, அவளைத் தேற்றிக்கொண்டிருந்தார் மன்னர். அலெக்சாண்டரின் படை உதவியேகூட நமக்குக் கிடைக்கவில்லையானாலும், இலங்கைத் தீவில், சோழப் பேரரசின் ஆணிவேரையே அறுத்து எறிந்துவிடப் போதுமான படைபலம் தங்களுக்கிருக்கிறது என்று எடுத்துச் சொன்னார் மன்னர்.

விகாரதேவிக்கு இது தெரியாதா என்ன? தெரிந்த விஷயங்களையேகூட சில வேளைகளில், இன்னொருவர் சொல்லிக் கேட்கும்போது ஒருவகை இன்பம் பிறப்பெடுக்கும் அளவுக்கு மனநிலைகள் இருப்பதில்லையா! அப்படித்தான், விகாரதேவியும் மன்னர் சொன்னதைக் கேட்டு மகிழ்ந்தாள்.

ஆனால், கல்யாணியில் தங்கி இருந்த தீசன் அப்படி நினைக்கவில்லை. ரோகணை, சோழப் பேரரசுக்கு எதிராகப் போர் தொடுக்கப் போவதை எதிர்க்கத் தொடங்கும் மனநிலைக்கு மட்டும் வந்துவிடவில்லை. காகவனதீசர் எடுத்துக்காட்டிய அந்தச் செய்தியால் ஆத்திரத்தின் உச்சியிலே ஏறி நின்று குமுறிக்கொண்டிருந்தான் தீசன். சிங்க எல்லத் தீவின் மண்ணை மிதிக்கட்டும் அந்த வஞ்சகன்! தலையைத் துண்டாடி, ஒழுகும் இரத்தத்தால், மாணிக்கக் கங்கையாற்றின் நீரையே செந்நீராக மாற்றுகிறேன் என்று வஞ்சினம் கூறினான்!

இந்த அளவுக்கு மன்னர் என்னதான் சொல்லிவிட்டார்?

போர் முடிந்து பட்டம் சூடிக்கொள்ளும் அதே வேளையில், தன்னைவிட போர் ஆற்றலிலும் உடல் வீரத்திலும் மிகுந்திருக்கும் தீசனையும், நந்திமித்திரனைக்கொண்டு, தந்திரமாகக் கொலை செய்துவிட்டு, அந்தப் பழியை ஆத்திரங்கொண்ட அநுராதபுரத்தின்மீது போட்டுவிடுவதாக கமணன் இருக்கிறான் என்றுதானே சொல்லி வைத்தார்.

தன் ஒரு மகனைப்பற்றி, இன்னொரு மகனிடம், ஒரு தந்தையே இப்படிச் சொன்னால், யார்தான் நம்பாமல் இருப்பார்கள்? தீசனுடைய ஆத்திரத்திற்கும் பொருள் இல்லாமல் போகவில்லையே!

தனது அந்த ஆத்திரம், கமணன்மீது படையெடுத்துச் சென்று தாக்கித் தகர்க்கும் அளவுக்கு உருமாறிவிட்டது என்று தந்தை அறிந்தால், அதனை அவர் ஒப்புக்கொள்ள மாட்டார் என்பது அவனுக்குத் தெரியாததல்லவே!

சுறுசுறுப்பாக இயங்கிய அவனது மூளை, தந்தைக்கேகூடத் தெரியாத பல திட்டங்களை, அப்போதே வகுத்துக்கொண்டது என்பது, காகவனதீசருக்குத் தெரியாமலே போய்விட்டது. அதனாலேயே, தீகவாபியில், ரோகணாவின் கருவூலத்தைக் கொண்டு திரட்டப்பட்ட படை முகாம், கலைக்கப் பட்டுப் போய்விட்டது என்று நம்பிக்கொண்டு திரும்பிவிட்டார். அவரது நம்பிக்கையை உறுதியடையச் செய்துவிட்டது, தேர்கள் மட்டும் தீயுண்ட காட்சி!

காகவனதீசருக்குத் தெரியாமலே மறைக்கப்பட்டுவிட்ட அந்த நிகழ்ச்சிக்குரிய கருவை, இப்போது பயன்படுத்திக்கொள்ளத் துணிந்துவிட்டான் தீசன்! கல்யாணியைவிட்டுப் பறந்தான் தீகவாபியை நோக்கி! போகுமுன், கல்யாணியின் ஒப்புதலையும் பெற்றான், படை உதவிக்காக! படையெடுப்பு அநுராதபுரத்தின்மீது என்பது கல்யாணி அறிந்த காரணம்! வியப்பல்லவா இது!

ஃ ஃ ஃ

கமணனும், நந்திமித்திரனும் திரும்பிவிட்டார்கள், மகாகாமா அரண்மனைக்கு. எதிர்கொண்டு அழைத்து உச்சிமோந்தாள் விகாரதேவி! கட்டித் தழுவிக்கொண்டார் காகவனதீசர். நந்திமித்திரன் ஓய்வெடுக்கப் போவதாகச் சொல்லி ஒதுங்கிக் கொண்டான்!

மாலைத் தென்றல் மந்தகாசமாக மகரந்த மணத்தை அள்ளித் தெளித்துக்கொண்டிருந்தது! அரண்மனையின் அந்தப்புரத்து நந்தவனம் என்றால் மணமலர்களின் வரிசைக்கும், வண்ணமலர்களின் அமைப்பிற்கும் எண்ணிக்கை இருக்குமா என்ன? இடைப்பட்டுவரும் தென்றலின் இன்பக் கிலுகிலுப் பூட்டும் போதைக்கு நிகர் ஏது?

மூச்சுத் திணருமட்டும் மாந்திக்கொண்டே அமர்ந்திருந்தனர் மூவரும். விகாரதேவியினால் மேலும் பொறுமையாக இருக்க முடியவில்லை. "கண்ணே கமணா! கனி பறித்து வந்தேன்; களித்துப் புசி என்று செய்தியினைச் சொல்லாமல், ஏதோ சிந்தனையில் மூழ்கி இருக்கிறாயே! ஆப்கானிஸ்தானத்துச் செய்தி என்ன? கிரேக்கன் என்ன சொன்னான்?" என்று கேட்டாள்.

வெற்றி கிடைத்திருந்தால், இன்னேரம் கமணன் போர்ப் பிரகடனமே செய்திருக்கமாட்டானா? முகத்தில் கரிபூசிக்கொண்டு வந்து அமர்ந்திருக்கிறான். அதனாலேயே எதுவும் பேசவில்லை என்று தனக்குள் நினைத்துக்கொண்டிருந்தாலும், மன்னர், விகாரதேவியைத் தூண்டிவிடுபவரைப்போல, கமணனைப் பார்த்து, "சொல்லடா மகனே! நல்ல செய்தியைச் சொல்லி, எங்கள் இதயத்தை மகிழ்ச்சியால் நிரப்பு" என்றார்.

கமணன் எதனைச் சொல்வான்? சென்று வந்த செய்தியினைச் சொல்லாமல்தான் எப்படித் தட்டிக் கழித்துவிட முடியும்?

"அம்மா! நாங்கள் ஆப்கானிஸ்தானத்துக்குப் போய்ச் சேருமுன்பே அந்த அலெக்சாண்டர் பார

சீசம் போய்ச் சேர்ந்துவிட்டாராம்! அப்பப்பா! அந்த கிரேக்கனைப்பற்றி எப்படி எப்படியெல்லாம் பேசிக் கொண்டார்கள் தெரியுமா? கவிஞர்கள் என்ருல், அவன் கண்ணைக் கேட்டாலும், கேட்டவர்களுக்குக் கொடுத்துவிடத் தயாராக இருந்தானும்! அவ்வளவு உயிராம் கவிஞர்கள்மீது! நிரம்பப் படித்த பேரறிஞனும்! ஆனல் அவன் கற்றவைகளை, கண்மூடித்தனமான வெறித்தனத்துக்குப் பயன்படுத்திக்கொண்டு விட்டானும்! திடீர்த் தாக்குதல், மறைந்திருந்து தாக்குதல், சூழ்ச்சி செய்து தாக்குதல் இவை போன்றவைகளே அவனது போர் முறையாகவும், இராச தந்திரமாகவும் இருந்ததாம்! அவன் பெற்ற வெற்றிகளுக்கெல்லாம் காரணம் வீரம்தான் என்பதைவிட, மூளைதான் என்றே பேசிக்கொள்கிருர்கள். இவ்வளவையும் கேட்ட பின்பு அவனைப் பார்க்காமல் திரும்பக்கூடாது என்று இருவரும், அங்கிருந்து பாரசீகத்துக்குப் பயணமாகத் தொடங்கும்போது, எங்களுக்கு ஒரு செய்தி கிடைத்தது. பாபிலோனியாவில் அவர் குளிர் சுரங்கண்டு இறந்துவிட்டாராம்! அம்மா, அப்போது எங்கள் இதயம் பட்டப்பாடு இருக்கிறதே......''

"ஊம், இவ்வளவுதாஞ கமணு! இதற்குத்தானு இவ்வளவு பெரிய பயணத்தை மேற்கொண்டாய். ஆறு திங்கள் பாழாகிவிட்டனவே!" என்ருள் விரக்தியோடு.

சுடர் மிகுந்த விழிகளால், தீசர் அவனை ஒரு முறை பார்வையிட்டுவிட்டு, எழுந்து சென்று கட்டியணைத்துக்கொண்டு, "நீ சென்ற காரியத்தில் வெற்றியீட்டி வராவிட்டாலும், மகனே, அலெக்சாண்டரின் போர்முறைகள்பற்றி அறிந்துகொண்டு வந்திருக்கிருயே, அது போதும் உன் வெற்றிக்கு! வெற்றி உன் பக்கம்தான் கமணு! நடைபெறப் போகும் இந்தப் போரில் வெற்றி உனக்குத்தான் மகனே!" என்று மூச்சுவிடாமல் பேசிக்கொண்டே இருந்தார்.

வியப்படைந்துபோன கமணன், விழிகளைத் தன் அன்னையின் பக்கம் திருப்பினன். கண்களின் மூலமே, மன்னரின் மனம் மாற்றம் பற்றித் தெரிவித்தாள் விகாரதேவி. "அப்பா! உங்கள் நல்லாசிதான் எனக்குக் கிடைக்காமல் இருந்தது இதுவரையில். அதுவும் எனக்குக் கிடைத்துவிட்டது. இனி என் வெற்றியை எதனுலும் தடுத்து நிறுத்த முடியாது" என்று கூறி, தீசரின் கால்களில் விழுந்து வணங்கினன் கமணன்!

மன்னரின் கண்களில் நீர்த்திரை முத்திட்டது. தூக்கி நிறுத்தி, "மகனே! உனக்குத்தான் வெற்றி கிட்டும்! கவலைப்படாதே!" என்று கூறிவிட்டு, எதையும் எதிர்பாராமல் அவ்விடம் விட்டகன்ருர். அவர் சென்றதும், கமணனும், ஓய்வெடுக்கப் போவதாக அவ்விடம் விட்டகன்ருன்.

மன்னர், அங்கிருந்து திரும்பிய பின்பு தன் இருப்பிடம் வந்து சேர்ந்தார். அவர் மனம் அமைதியின்றி அலைக்கழியத் தொடங்கியது. இரட்டை வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருக்க இனியும் தன்னல் முடியாது என்று எண்ணினர்.

போர் நடைபெறக்கூடாது என்பதற்கான முயற்சிகள் ஒரு பக்கம்; போரில் வெற்றிபெற நல்லாசி நல்குவது ஒரு பக்கம்! இந்த வாழ்க்கை ஒரு வாழ்க்கையா? தன் திட்டங்கள் அனைத்தும் விகாரதேவிக்கோ, அல்லது கமணனுக்கோ தெரிந்துவிட்டால், பின்பு அவர்கள் முகத்தில் எப்படி விழிப்பது?... என்ற ரீதியில் காகவனதீசரின் சிந்தனைகள் சுடர்விடத் தொடங்கிவிட்டன.

போலித்தனமான அந்த வாழ்க்கையின்மீது ஒரு வித வெறுப்பு படரத் தொடங்கிவிட்டது. ஒன்று, தான் முழுமையாக ரோகணுவின் செயல்களை ஆதரிக்கும் வகையில் மாறவேண்டும். அல்லது நேரடியாகவே எதிர்க்கத் தொடங்கி விடவேண்டும்? இரண்டில் ஒன்றை உடனடியாகக் கைகொள்ள வேண்டும்! எந்த வழியைத் தேர்ந்தெடுப்பது?

போர் நடவடிக்கைகளைத் தன்னல் எந்தக் காலத்திலும் ஆதரிக்கவே முடியாது; அப்படியானல் ரோகணுவை நேரடியாக எதிர்த்துத்தான் தீரவேண்டும்—அதுவும் தன் முதுமையினல் முடியாத ஒன்றுதான்!

மூளை குழம்பியது மன்னருக்கு! ரோகணுவின் அரண்மனை இடிந்துத் தூள் தூளாவதைப்போன்றும் கமணன் காட்டு மிருகங்களால் தாக்குண்டது போன்றும், தாங்கள் கைதிகளாக எள்ளாளர் முன்பு நிறுத்தப்பட்டிருப்பது போன்றும் கற்பனை செய்து பார்த்த அந்த நிகழ்ச்சி, மீண்டும் இப்போது காட்சியாகத் தெரியத் தொடங்கியது!

"அருகக் கடவுளே!"—என்று வாய் விட்டுச் சொன்ன மன்னர், உடல் பதற்றத்தால், மஞ்சத்திலிருந்து கீழே உருண்டார்.

முதுமையின், பலவீனம் முழுதுமாக இப்போது அவரைப் பற்றிக்கொண்டு விட்டது. கீழே விழுந்த




அவர் தள்ளாடித் தள்ளாடித்தான் மீண்டும் எழுந்து அமர முடிந்தது. எழுந்து அமர்ந்த அவர், மயங்கிச் சாய்ந்துவிட்டார் மஞ்சத்தில்.

ஃ ஃ ஃ

மன்னரின் உத்திரவுப்படியே இனி போர்க் காரியங்கள் அனைத்தும் நிகழ்த்தப்பெறவேண்டும் என்பது பற்றிய உத்திரவை, முதலமைச்சர் காசியபரிடம் வழங்கிக் கொண்டிருந்தாள் விகாரதேவி. அந்த அரிய உத்திரவைப் பெற்றுக் கொண்டு, காசியபர், மன்னரைச் சந்திக்கப் புறப்பட்டார், விகாரதேவியைவிட்டு.

ஃ ஃ ஃ

ஓய்வெடுக்கச் சென்ற கமணனுக்கு, அண்மையில் மகானுகல சேதியத்தின் புனிதத் திறப்புவிழாவின்போது, பௌத்தர்கள், ரோகணவுக்கு எதிராகத் திருப்பப்பட்டார்கள் என்ற செய்தி எடுத்துக் கூறப்பட்டது, சூரநிமிலன் என்ற ஒரு துணைத் தளபதியினால். கமணன் அதுகேட்டு வெகுண்டெழுந்தான். அதே சமயத்தில் தீகவாபியிலே தேர்கள் எரிக்கப்பட்ட செய்திபற்றியும் காதில் விழுந்தது என்று எடுத்துக் கூறினான் சூரநிமிலன். புதியவர்களைக் கொண்டு, உருவாக்கப்பட்ட புதிய படைப் பிரிவுகூட கலைக்கப் பட்டுவிட்டதென்றும் எடுத்துக் கூறினான் அவன். இவ்வளவும், மன்னர் தீகவாபிக்குப் போய் விட்டுத் திரும்பிய பிறகுதான்! என்பதையும் அவன் மேலோட்டமாக எடுத்துக் காட்டினான். சிற்றிளவரசன் தீசன், தீகவாபியில் இப்போது தங்கியிருக்கவில்லை என்பதையும் அறிந்தான்.

இவ்வளவையும் கேட்டுவிட்ட பிறகு, கமணனுக்கு பயணக் களைப்புக்கூடப் பெரிதாகத் தெரியவில்லை. சற்றுமுன்பு தன் அன்னை, அவரைப் பற்றி பாராட்டிக் கூறினாள். தந்தையே தன் வெற்றிக்கு நல்லாசி நல்கினார். இப்போது அவரைப் பற்றிக் கிடைக்கும் செய்திகள்? கமணனது குருதி, சூடேறிக் கொண்டிருந்தது. துணைத் தளபதியைப் பார்த்து, “இவ்வளவும் உண்மையான தகவல்கள் தானா? தீகவாபிப் படைப் பிரிவு கலைக்கப்பட்டுவிட்டது என்பது உண்மைதானா?” என்றான். “நான் ரோகணவுக்கு எதிராக சதி செய்ய வேண்டிய அவசியமில்லை இளவரசே!” என்றான் சூரநிமிலன்.

சூரநிமிலன் சொன்ன பதிலிலிருந்து, தன் தந்தை தங்களுக்கு எதிராகச் சதிசெய்து கொண்டிருக்கிறார் என்று எண்ணத் தொடங்கிவிட்டான் கமணன்! இருப்புக் கொள்ளவில்லை அவனுக்கு! எல்லாமே வெளி வேடம்!! என்ற சொற்களை உகுத்தன கமணனது உதடுகள்.

அந்த நேரம் பார்த்து அவள் அங்கு வருவாளா? கமணனது தேவைகளைக் கவனித்துக்கொள்வதற்காக நியமிக்கப்பட்டிருந்த பணிப்பெண் அவள்! அவளை அருகே அழைத்தான் கமணன்! ஏதோ தன் தேவையைக் குறித்துச் சொல்லப் போகிறார் என்ற எண்ணத்தில் நளின நடையுடன் அருகே சென்று நின்றாள். கமணன் ஏற இறங்கப் பார்த்தான் அவளை. இமை கொட்டாமல் சிறிது நேரம் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். சட்டென்று, “ஏய் உன் ஆடைகளைக் கழற்று” என்றான் கமணன்.

பணிப் பெண் பதறிப்போனாள். அவளிடம் அதற்குமுன் கமணன் எத்தனையோ முறை அப்படிக் கூறி இருக்கிறான். அவளை முந்திக்கொண்டு, அந்த

வண்ணமிகு படைப்புகள், வர்ணமய உலகம்.
அதுவே கோ-ஆப்டெக்ஸ் உள்ளடக்கம். பட்டுகள் பிரமாதம்.
நெசவோ நெஞ்சையள்ளும். குர்தாக்கள், பெல் பாட்டம்கள்,
லுங்கிகள், சேலைகள்! உங்கள் உள்ளம் ஏங்கும் சிருஷ்டிகள்!!

கோ-ஆப்டெக்ஸ் படைப்புகள்.

கோ-ஆப்டெக்ஸ்

காலப்போக்கிற்கு ஏற்ற வர்ணஜால ஆடைகள்...
கோ-ஆப்டெக்ஸ் சகாயமான விலை...
ஆதாயமான உழைப்பு.

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட்,
பாலசுந்தரம் பில்டிங்ஸ்,
எழும்பூர், :: சென்னை - 8.

வேலைகளை அவனேகூட செய்திருக்கிறான். ஆனால் இப்போது?.........துணைத் தளபதிகூட அருகே நிற்கிறானே!

பணிப்பெண்ணின் உடல் ஆட்டங் காணத் தொடங்கியது. கமணனின் கண்கள் சிவந்துகொண்டிருந்தன. "கழற்றப் போகிறாயா இல்லையா?" என்றான் மீண்டும்!

சூரநிமிலனுக்கே வெட்கமாகப் போய்விட்டதோ என்னவோ! அல்லது வேறெதையாவது அவன் எண்ணிக்கொண்டுமிருக்கலாம். அங்கிருந்து வெளியேறி ஒரு அறைக்குள் புகுந்துகொண்டான்.

இப்போது பணிப் பெண்ணுக்கு, கொஞ்சம் அச்சம் நீங்கினாலும், பதட்டம் குறையவில்லை. தயங்கிக் கொண்டே நின்றுகொண்டிருந்தாள், "என்ன இருந்தாலும் இப்படி..." அவள் சொல்லி முடிக்கவில்லை.

"உன் உடைகள் எனக்கு இப்போது அவசரமாகத் தேவை. கழற்றப் போகிறாயா இல்லையா?"

"என் உடைகள்தானே இளவரசருக்குத் தேவை! உடல் அல்லவே!"—

பணிப்பெண் அப்படிக் கேட்டதும்தான் தன் தவறுபற்றி எண்ண முடிந்தது கமணனால்! அதிகாரக் குரலை குறைத்துக் கொண்டு, "உடைகள்தான் இப்போதைக்குத் தேவை? மாற்றுடைகள் வைத்திருக்கிறாயா?" என்றான்.

"ஓ! இதோ கொண்டு வருகிறேன் இளவரசே! என்று கூறி வெளியே ஓடியவள், சிறிது நேரத்துக்குள், மாற்றுடைகள் ஒன்றைக் கொண்டு வந்து கொடுத்தாள், ஏன் அவை? என்று கேட்கத் துணிவற்றவளாக.

அதனைப் பெற்றுக்கொண்டதும், கமணன் அவளை அனுப்பிவிட்டுப் பணியாளை அழைக்கும் மணியை ஓங்கி அடித்தான். அதன் ஒலி, குன்றுவதற்குள் இன்னொருவன் வந்து எதிரேநின்று வணங்கி நின்றான். தளபதியும், தனிஅறையிலிருந்து சிரித்துக்கொண்டே வெளிப்பட்டான்.

பெண் உடைகளைப் பணியாளிடம் கொடுத்து, "என் தந்தையிடம் கொண்டுபோய்க் கொடுத்து—இவற்றை அணிந்துகொள்ளச் சொல்! இந்த உடையுடனேயே வந்து என்னைச் சந்திக்கச் சொல்!" என்று கூறி அனுப்பினான்.

பணியாள் போனதும், சூரநிமிலன், "நீங்கள் விளையாட்டுக்காக இப்படிச் செய்தால்கூட, அது மிகப் பெரிய குற்றமாகிவிடும் இளவரசே! ஏதேனும் விபரீதம் நிச்சயம் விளையக்கூடும்" என்றான்.

தளபதி அப்படிச்சொன்னதும், "என் தந்தையை நான் ஒரு ஆண் மகனாகவே நினைக்க முடியவில்லையே! அவருக்கு ஏற்ற உடையைத்தான் நான் அனுப்பி இருக்கிறேன்" என்றான் கமணன். "ஆனாலும் விளைவுகள் கடுமையானதாகத்தான் இருக்கும்; உங்கள் அன்னையார்கூட இதனை அனுமதிக்க மாட்டார்கள்"—என்றான் சூரநிமிலன்.

# சுவைத்ததைச் சொல்கிறோம்

'நச்சுக்கை' கதையை எழுதிய கையும் ஒரு நச்சுக்கைதானோ! பால் ஒழுகும் பாலகனையா, இப்படிப் பலி கொடுப்பது?—என்று முதலில் எண்ணினேன்; பிறகு, எத்தனையோ இடங்களில் இப்படியும் நடக்கத்தான் செய்கின்றன என்று ஆறுதலடைந்தேன். துணிவான சோகம் மிகுந்த படைப்பு அது. தாமரைக்கண்ணனுக்குப் பாராட்டுக்கள்! இளஞ் சிறார்கள் பெறவேண்டிய பாடம் இதிலே இழையோடுகிறது.

ஆர். வைரக்கண்ணு, ஈரோடு.

அண்ணா என்னும் அறிவின் வடிவை
கண்ணால் கண்டேன்; களிமிகு கொண்டேன்!
அரும்பெருங் கருத்தினை அழகுடன் சேர்த்து
பெரும்புகழ் பெற்றிட பெரிதும் உழைத்து(ன்)வீர்!
'காஞ்சி' இதழும் கவினுடன் விளங்கி
காஞ்சி மன்னனின் கரங்களை உயர்த்தி
அகிலம் முழு(வ)தும் அவ்விதழ் பரவிட
மகிமை சேர்த்தே மாண்புடன் அதனை
வீரஞ் செறிய வெளியிட் டிடுவோம்
பாரெலாம் புகழ பார்த்தே மகிழ்வோம்!

இராம. மறைமுதல்வன்,
வடமாதிமங்கலம் (வ.ஆ.)

24—11—71 இதழில் வெளிவந்துள்ள வினா—விடைப் பகுதி, நல்ல, தரமான அரசியல் விளக்கமாக அமைந்திருந்தது. அறிஞர் அண்ணா அவர்கள், இதற்கு முன் இப்படித்தான் வினா—விடை பகுதியைத் தந்து வந்தார்கள். இனியும் இதுபோலவே இருந்தால், சுவையும் பயனுமுடையதாக இருக்கும்.

சி. அண்ணாமலை, திருத்தணி.

சுவை மிக்கதாகப் போய்க்கொண்டிருக்கும் சோழமாதேவி, திடீரென்று எங்களை ஏமாற்றிவிடுகிறாள். 31.11.71 இதழின் தொடக்கத்தைப் படித்து நானும் நண்பர்களும் உண்மையிலேயே ஏமாந்துவிட்டோம் ஆசிரியர் எல்லாரையும் ஏமாற்றி கதையை சட்டென்று முடித்துவிட முன்வந்து விட்டாரேயென்று நாங்கள் திகைத்தோம்! ஆனால் என்ன ஏமாற்றம்! அது வெறும் கற்பனைதான் என்று அப்புறம்தான் தெரிந்தது. இதுபோன்ற கற்பனைகள் திரு. ராஜமன்னன் அவர்களுக்கு அதிகமோ? அவரது உண்மைப் பெயரை நாங்கள் அறியக்கூடாதா?

பி. பா. அன்பரசன், சிவகங்கை.

மிஸ்டர் அப்போலோ பகுதியில் காணப்படுவது வெறும் அரசியல் விஷயங்கள்தான் என்றாலும், அதனைச் சுவைபட விவரிக்கும் பகுதியாக அது இருந்தது. நாங்கள் விரும்பிப் படிக்கத் தொடங்கிய நேரத்தில், திடீரென்று நிறுத்திவிட்டீர்கள் இப்போது மறுபடியும் தொடங்கி இருக்கிறீர்கள். இப்போதும் அதுபோல் அந்தப் பகுதியை அனாதையாக விட்டுவிடாதீர்கள். அப்புறம் இன்னொன்று—மறுபடியும்—ஆமாம், மறுபடியும்தான் அந்திக்கலம்பகம் பற்றிக் கொஞ்சம் யோசிக்கக்கூடாதா?

ஜி. தென்னவன், சின்ன சேலம்.

'கேள்வி—பதில்' பகுதியை மறுபடியும் தொடங்க மாட்டீர்களா? 'வெண்பாப் போட்டி'யை ஆரம்பிக்கவே போவதில்லையா?

புலவர். வளவன், விருத்தாசலம்.

# புண்ணியவதி

— அரிமதி தென்னகன் —



**சிறுகதை!**

“மங்கம்மா……!”

அந்தக் குப்பத்து மக்களுக்கு நன்குஅறிமுகமானபெயர்.“மங்கம்மான்ஞ மங்கம்மாதான்; மவராசியாச்சே மங்கம்மா; மங்கம்மாவாட்டம் எவ இருப்பா?” என்ற பேச்சு ஒலிக்காத குடிசைகளே இருக்க முடியாது.

எங்கேயாவது புறப்படும்போது மங்கம்மா எதிரில் வந்தால் போதும். தெய்வமே எதிரில் வந்ததுபோல் மகிழ்ந்து, “போற காரியம் ஜெயந்தான்” என்று நம்பிக்கையோடு செல்பவர்களும் உண்டு.

‘மங்கம்மா மாதிரி மனைவி கிடைக்கவில்லையே என்று ஏங்கும் வாலிபர்கள் அங்கு ஏராளம்.

“மங்கம்மா! கொஞ்சம் வந்துட்டுப் போயேன்; மகளுக்குத் தாலி பிரிச்சுக் கோக்கணும்”

“மங்கம்மா! தவரும வந்துடு; மாப்பிள்ளை வீடு பார்க்கப் போகணும்”

“மங்கம்மா! குழந்தைக்கு ரெண்டுநாளா உடம்பு சரியில்லே; என்ன செய்யலாம்”

இப்படி, அந்த வட்டாரத்துக்கே மங்கம்மா மருந்தாக இருந்தாள்.

மங்கம்மாவின் கணவன் கண்ணு-சாமிக்கு மரியாதையே தனிதான்.

பெயர்தான் கண்ணுசாமியே தவிர, குடிசை வாசிகளுக்கு எப்போதுமே புண்ணியவான் என்றுல் தான் தெரியும்.

கண்ணுசாமி புண்ணியவானுக மாறியது மங்கம்மாவின் கணவன் என்னும் பெருமையால்தான்.

கண்ணுசாமி அதை உணராமல்-இல்லை. கண்ணுசாமிக்கு மங்கம்மா கட்டிய மனைவியாகவே தெரியவில்லை; அவனைப் பொருத்த வரை அவள் தெய்வமாகவே பட்டாள்.

எங்கெங்கோ, எப்படியெப்படியோ, சுற்றியலைந்த தன்னை ஏழெட்டுக் குடிசைகளுக்குச் சொந்தக்காரனுக்கியதும், ‘இவனும் ஒரு மனிதனு?’ என்றிருந்த தன்னை ‘இதோ போறுரே புண்ணியவான்’ என்றுக்கியதும் மங்கம்மாதான். என்பதை நினைந்து மகிழ்ந்தான் கண்ணுசாமி.

பழுக்கப் பழுக்கப் பூசிய மஞ்சளும், எட்டணு அளவிற்கு வைத்த பொட்டும், தழையத் தழைய வைத்தப் பூவுமாக நாளும் காட்சி தரும் தன் மனைவியைப் பார்த்துப்-பார்த்து மகிழ்ந்தான் கண்ணுசாமி.

கண்ணுசாமிக்கு எல்லாமே மங்கம்மாதான்!!

அப்படிப்பட்ட மங்கம்மா இரண்டொரு நாட்களாக எல்லாருக்குமே ஒரு புதிராகப் பட்டாள்.

உடம்புக்கு என்னமோ ஏதோ என்று பதறி ஓடி வந்தவர்களும் உண்டு.

“என்ன மங்கம்மா! உடம்புக்கு என்னம்மா…!”

“எவனுவது சரியா வாடகைப் பணம் கொடுக்கலையா? சொல்லு மங்கம்மா; அவன் சொக்காயை வித்துக் கொண்டாறேன்”

எல்லாவற்றிற்கும் ‘ஒன்னுமில்லே’ என்ற பதிலைத் தவிர, வேறெதையும் மங்கம்மா சொல்லவில்லை.

சொல்லவில்லையாவது…?

சொல்ல முடியவில்லை!!

‘காத்து சேஷ்டையா இருக்குமோ’ என்று எவனே ஒருவன் சொல்ல, ஊரில் உள்ள மந்திரக்காரனெல்லாம் குப்பத்தில் கூடிய போது கூட, ‘அதெல்லாம் ஒன்றுமில்லே’ என்றுதான் மங்கம்மாவால் சொல்ல முடிந்ததே தவிர, வேறெதையும் அவளால் சொல்ல முடியவில்லை.

மஞ்சளையும், பூவையும், குங்குமத்தையும் மங்கம்மாவின் கைகள் தொட்டுப் பார்த்துப் பத்து நாட்களாகிவிட்டன.

செக்கச் சிவந்திருந்த மங்கம்மாவின் உடல்களைத்துக், கருத்துவிட்டது. இரவும் பகலும் மங்கம்மாவிற்கு ஒன்ருகிவிட்டது.

குடிசையைவிட்டு வெளியே வருவது கூடகிடையாது.

இன்றைக்குச் சரியாகிவிடும்; நாளைக்குச் சரியாகிவிடும் என்றிருந்த குப்பத்து மக்கள், பத்து நாட்களாகியும், மங்கம்மாவிடம் மாற்றத்தைக் காணுமல் ஏமாந்தனர்.

மங்கம்மாவின் இந்தநிலை, குப்பத்துப் பெண்களுக்குக் கையுடைந்ததுபோல் இருந்தது.

பொதுவாக அந்தக் குப்பமே நொண்டியாகிவிட்டது,

மங்கம்மாவின் மனமோ நொண்டியாட்டமே ஆடிக்கொண்டிருந்தது.

தன்னைத் தெய்வமாக, தேவதையாக, மங்கலப் பெண்ணுக, வழி

காட்டியாகப் போற்றும் குப்பத்து மக்கள் தன்னுடைய மாற்றத்திற்கான காரணங்களைத் தெரிந்துகொண்டால், தன்னைப்பற்றி என்ன நினைப்பார்களோ என்ற கவலை வேறு மங்கம்மாவைப் பிடித்தாட்டியது.

பொட்டின்றி, பூவின்றி குலுங்கும் வளையலின்றி இருப்பதற்கு—இனிமேல் நிரந்தரமாக இருக்க வேண்டியதற்கு—உண்மையை மறைத்து வேறு எந்தக் காரணங்களைக் கூறுவது?

கூறுவதைத்தான் மக்கள் நம்புவார்களா?

நம்பாவிட்டால் தன்கதி?

மங்கம்மாவிற்கு இருந்த கவலையோடு, இப்படி எத்தனையோ கவலைகள் படையெடுப்பதைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

அப்படியென்றால்...?

"பழைய நிலைக்கே வந்து விடலாமா"

'சீச்சீ' என்றது அவள் வாய்.

"இனிமேல்பொட்டாவது? பூவாவது? உலகத்துக்கும், ஊருக்கும் தெரியாமல் இருக்கலாம்; ஆனா, இந்தப் பாழாப் போன மனசு; காலகாலமா இருந்துவருகிற பழக்கம்!!"

மனப் போராட்டத்திற்கு மங்கம்மாவாள் ஈடு கொடுக்க முடியவில்லை.

இதுக்கு மட்டும் பழக்கம், வழக்கம்; பரம்பரைன்னு பேசறியே. நீ அந்தத் தப்பை மட்டும் செய்யலாமா?

அதுமட்டும் நல்லபழக்கமா?

அதுமட்டும் சிறந்தவழக்கமா?

அதுமட்டும் பரம்பரைக்கு ஏத்ததா?"

இந்தக் கேள்விகளுக்கு மட்டும் அவளால் பதில் சொல்ல முடியவில்லை.

தன் தவறை ஒப்புக்கொள்ள முடியாதவர்களுக்குத்தானே 'விதி' துணையாகிறது.

அந்த 'விதி' தான் மங்கம்மாவுக்கும் துணை செய்தது.

"உம்...என்னசெய்வேன்...நான் தெரிஞ்சா அந்தத்தப்பைச் செய்தேன்; எல்லாம் என் தலைவிதி; இப்படித்தான் நடக்கனும்னு இருந்தா நான் என்ன செய்யமுடியும்"

மங்கம்மா ஒரு தொல்லையிலிருந்து தப்ப முயற்சி செய்தாள்.

எதிலிருந்து மங்கம்மாவால் தப்ப முடிந்தாலும், 'இனி என்ன செய்வது?' என்ற கேள்வியிலிருந்து மட்டும் அவளால் தப்ப முடியவில்லை.

எப்படியும் இன்னும் ஐந்து நாட்களுக்குள் ஒரு முடிவுக்கு வந்தாக வேண்டும்.

ஆறாவது நாள் காலையில் இன்னும் ஒரு மாற்றத்திற்கு மங்கம்மா ஆட்பட்டே தீரவேண்டும்.

மங்கம்மாவிடம் ஏற்படவேண்டிய அந்த மாற்றத்திற்குப் பிறகு, குப்பத்து மக்கள் குருடாக இருக்க மாட்டார்கள்.

அவர்களுக்குக் காரணத்தைக் கூறியே தீரவேண்டும்.

காரணத்தைக் கூறிய பிறகு மங்கம்மாவால் அந்தக் குப்பத்தில் தலை நிமிர்ந்து நடக்க முடியாது என்பது மட்டும் உண்மை.

"'ப்பூ' இவ்வளவுதானா இவ!!"

"எல்லாமே வேஷந்தானா!!"

"தாழம்பூக் கொண்டைக்குள்ள வெறும் ஈரும் பேனுந்தானா!! சீச்சீ! இவளைப் போயி பெரிய மனுஷின்னு நினைச்சோமே!!"

மங்கம்மா தன் காதுகளை மூடிக்கொண்டாள்.

"வருவது வரட்டும்" என்ற துணிவு மங்கம்மாவின் முகத்தில் பிரதிபலித்தது.

முடிவெடுத்தாகவேண்டிய அந்த நாளும் வந்தது. ஆம்! பொட்டையும், பூவையும் வைக்காமல் விட்ட பதினைந்தாவது நாள் அது.

அன்றை இரவுக்குள் அவள் ஒரு முடிவுக்கு வந்தாகவேண்டும்.

"ஏந்தே!" மங்கம்மா நீண்ட நாட்களுக்குப்பிறகு தன் கணவனை அழைத்தாள்.

கண்ணுசாமிக்கோ ஒரே அதிர்ச்சி!



பதினைந்து நாட்களுக்குப் பிறகு மங்கம்மாவின் அழைப்பு அவனுக்கு அதிசயமாகக்கூட இருந்தது.

"என்ன மங்கம்மா" அருகே வந்து அமர்ந்தான் அவன்.

ஏதோ சொல்ல வாயைத் திறந்தாள் மங்கம்மா. அதற்குள் அவள் நெஞ்சில் ஏதோ ஒன்று அடைந்தது.

எதைச் சொல்வாள்?

எப்படிச் சொல்வாள்?

"உன்னிடம் நான் வருவதற்கு முன்னரே எனக்குக் கல்யாணம் ஆகிவிட்டது; நாலுபேரறிய என் கைப்பிடித்தக் கணவன் கட்டியது தான் இந்தத் தாலி.

இதோ, என் கழுத்தில் தொங்கும் இந்தத் தாலி அவர் கட்டியது தான். நீ நினைப்பதுபோல நான் உன்னிடம் வரும்போது கன்னிப் பெண்ணல்ல. நீ நடுவீட்டுத் தாலியாவது கட்டத் துடித்தபோது, 'உள்ளம் ஒன்று பட்டபோது இதெல்லாம் எதுக்கு' என்று நான் சொன்னதெல்லாம் பொய். ஒரு நாள், என் கழுத்தில் தொங்கிய தாலியைப் பற்றிக் கேட்டபோது, நீ ஒரு மாசமா எங்கோபோயிருந்தபோது, இந்த ஊரே கரிச்சிக்கொட்டியதாலே நானே கட்டிக்கொண்டதாகச் சொன்னேனே அதெல்லாம் சுத்தப் பொய்"

இப்படியெல்லாம் சொல்லத்தான் நினைத்தாள். ஆனால் அவளால் முடியவில்லை.

இதையே அவளால் சொல்ல முடியாத போது, "என் கழுத்தில் தாலி கட்டியவர் செத்துப் பதினைந்து நாளாச்சு. அவர் கட்டிய இந்தத் தாலியை இன்றைக்குக் கழற்றியாக வேண்டும். இனிமேல் நான் ஊராரின் பழக்கப்படி விதவை. எனக்கு இனி பொட்டில்லை; பூவில்லை; மஞ்சள் இல்லை; இனி நான் தாலியறுத்தவள்" என்பதை மட்டும் அவளால் எப்படிச் சொல்ல முடியும்?

"என்ன மங்கம்மா; ஏந்தேன்னு கூப்பிட்டே; பேயடிச்சமாதிரி பேசாம இருக்கியே."

"அதெல்லாம் ஒன்னுமில்லதே; சும்மாத்தான்..."

கண்ணுசாமி பெருமூச்சு விட்டுக்கொண்டே எழுந்து நடந்தான்.

மங்கம்மா அவனையே வைத்த கண் வாங்காமல் பார்த்தாள்.

(4-ஆம் பக்கம் பார்க்க)

# புற்றுநோயே தொலைந்து போ!



"இறைவன்"

புற்றுநோய் உருவில் திமை
　புரிந்திடும் புண்ணே! நீயும்
சற்றுவாய் திறந்தாய்! எங்கள்
　தலைவனை உண்டாய்! தேனைப்
பெற்றுவாய் மொழிஉதிர்க்கும்
　பேரறி வாள னையா
பற்றினுய்? சீச்சீ! தேக்கைப்
　பாடைக்கா வெட்டு வார்கள்!

அரித்திடும் கரையான் வாயில்
　அருங்குறள் நூலா? ஐயோ!
விரித்திடும் உன்கரத்தில்
　விழுந்திட: புற்றைக் கட்டி
அரித்திடும் உன்வா யிற்கு
　அகப்பட கிடைத்த தெல்லாம்
சரித்திரம் படைத்த எங்கள்
　தலைவனின் வயிறு தானு?

எப்படி மனம்து ணிந்தாய்
　யாருனை அனுப்பி ஞர்கள்?
முப்படித் தேனை நாவால்
　முகந்தளிப் பான்வ யிற்றில்
தப்படி போட்டு வந்து
　தங்கியே அழிப்ப தற்கு
இப்படிப் பாதை யென்று
　எவர்வழி காட்டி ஞர்கள்?

வயிறெறிந் திட்ட மாற்றார்
　வழியனுப் பிஞரா? இல்லை!
உயிர்பறிக் கின்ற காலன்
　உனைஅனுப் பிஞனு? தீயின்
பயிரென அண்ணன் வாழ்வைப்
　பறித்தனை! ஐயோ! எங்கள்
வயிறெறி கின்ற தே!நீ
　வளமுடன் வாழு வாயா?

மண்ணினில் மடையர் உண்டு
　மகிழ்வது சோறு! எங்கள்
அண்ணனே உண்ப தெல்லாம்
　அருந்தமிழ்ச் சாறு! என்று
கண்டுமே தமிழ்ச்சு வையில்
　களித்திட நீவிருப்பம்
கொண்டுமே உணவுப் பாதைக்
　குழலினில் குடிகொண் டாயோ?

கோடிபேர் வயிற்றில் நீயும்
　குடிபுகுந் தாலும் உன்னை
பாடுவோர் இல்லை என்று
　பாவிநீ எம்அண் ணுவைத்
தேடியே பிடித்துப் பாட்டில்
　சிறப்புற நினைத்தாய்! ஐயோ!
நாடிவந் திருந்தால் பாடி
　நானுமே தொலைத்தி ருப்பேன்!

பாட்டினைச் சொல்லின் மூலம்
　கொடுப்பவன்! அறிஞன் வாழ்வின்
ஏட்டினை அரித்து விட்ட
　இழிபெரும் புற்று நோயே!
வீட்டினைக் குளிருக் காக
　விளக்கெடுத் தெரிப்பார் உண்டா?

புண்ணினை வயிற்றில் பெற்றுன்
　பொழுதெலாம் உழைத்த தாலே!
புண்ணினை நெஞ்சில் பெற்றுன்
　புலையரின் திட்ட லாலே!
மண்ணினில் மக்கள் நன்கு
　மகிழ்ந்திடும் வழியைத் தேடி
எண்ணியே ஏங்கி நாளும்
　இதயத்தில் புண்ணைப் பெற்றுன்!

புண்ணினை வயிற்றில் பெற்று
　போயினன் அண்ணன்! மண்ணில்
புண்ணினை நெஞ்சில் பெற்று
　புலம்பினர் மக்கள்! நாளும்
பண்ணினை வளர்த்த ளிக்கும்
　பாவலர் கூட்டம் ஐயோ
புண்ணினை நாவில் பெற்று
　பொழுதெலாம் துடிக்கின் முர்கள்!

எத்தனை பேர்நெஞ் சத்தை
　எரியவே செய்தாய்! மண்ணில்
இத்தனை பாவம் உன்னை
　இனியுமா விட்டு வைக்கும்!
புத்தனை அழித்த நோயே!
　புற்றுநோய் உனக்கும் வந்து
செத்தனை என்று லேதான்
　சிரித்திடும் எங்கள் நெஞ்சில்!

மண்ணினில் உனைய ழிக்கும்
　மருந்தினைக் காண்போம்! எங்கள்
அண்ணனை அழித்த நோயே!
　அணுஅணு வாய்உ னக்குத்
தண்டனைக் கிடைக்கும்! கண்டு
　தமிழ்நிலம் சிரிக்கும்! நீதி
உண்மையை உரைக்கும்! உந்தன்
　உயிரினைப் பறிக்கும்! ஓர்நாள்!

# யோக்கியர்களே! பதில் சொல்லுங்கள்!

எவன் கரங்கள் இதுவரை கரைப் பட்டதில்லையோ, அவன் என்மீது முதல் கல்லை வீசட்டும்.

—என்று யாரோ சொன்னதாக ஒரு வரலாறு உண்டு.

யோக்கியனுக்கு மட்டுமே பிறருடைய யோக்கியதைகளை விமர்சிக்கும் தகுதி உண்டு என்பது இதன் பொருள்.

கழக அரசோ இந்திரா அரசோ லஞ்ச ஊழல் நடத்துவதாக — அல்லது வேண்டியவர்களுக்கு லைசென்ஸ்கொடுப்பதாகக் குற்றஞ் சாட்டுவதற்கு காமராசர் கூட்டத்திற்குத் தகுதி உண்டா?

கேட்பவன் தூரத்தி லிருந்து மேலோட்டமாகப் பார்த்துவிட்டு சொந்த ஆத்திரத்தினுல் கேள்வி போடுபவன் அல்ல.

காமராசரின் அகமும் புறமும் அறிந்தவன்-சத்தியமூர்த்திபவன் சாகசங்களைப் புரிந்தவன் - திருமலைப்பிள்ளை ரோட்டிற்கு தேடி வந்தவர்களைத் தினமும் சந்தித்தவன் -அரசியல் என்ருல் இந்த லீலைகளும் உள்ளடங்கித்தான்இருக்கும் என்று முடிவுகட்டிக்கொண்டு இதுவரை பேசாதிருந்தவன்-இப்போது பேசுகிறேன்.

ஏன்?

டாக்டர் கருணுநிதி தன் நண்பர்களுக்கு லைசென்சுகள் வழங்கியிருக்கிருர் என்று தொடர்ந்து அந்த உத்தமபுத்திரர்கள் — சத்தியசீலர்கள் குற்றஞ் சாட்டிக்கொண்டிருக்கிருர்களே, அவர்களது முகமூடியைக் கிழித்து உள்ளே கிடக்கும் ஊழல்களை வெளியே கொட்டுவதற்காக.

கலைஞர் கருணுநிதிவழங்குகின்ற லைசென்சுகள், அவரது நண்பர்களுக்கு மட்டுமல்ல—

எல்லா கட்சி நண்பர்கட்கும் போயிருக்கிறது!

எல்லாவற்றையும் விட அதிகமாக, சிண்டிகேடர்களுக்குத்தான் அதிகம் போயிருக்கிறது.

கலைஞரின் விட்டு வாசலில் அவர்களைத்தான் நான் அதிகம் பார்க்கிறேன்.

மதுரைப் பிரமுகர்கள் மண்டியிட்டுக்கிடந்ததையும், சேலம் பிரமுகர்கள் செக்ரடரியேட்டை வட்டமிட்டு வந்ததையும் நான் கண்ணுரக் கண்டிருக்கிறேன்.

சாதி, மத, இன, கட்சிப் பாகுபாடு பாராமல் நியாயமான வழிகளில், தேவையான தொழில்களை கலைஞர் பங்கிட்டுக் கொடுக்கிருர் என்பதை அரசாங்கத்தின் தஸ்தாவேஜுகள் நிரூபிக்கும்.

அவர் மீதோ, அவரிடமிருந்து தொழில் பெறுவோர் மீதோ எவரும் குற்றம் சாட்டிவிட முடியாது.

ஆயிரம் காமராசர்களும்அவரது வளர்ப்பு ஏடுகளும் தோண்டித் தோண்டி ஆராய்ந்தாலும், சொல்வதற்கு உண்மை கிடைக்காது.

கட்டுக் கதைகளைக் கட்டலாம்! நீதி மன்றத்தில் அபராதமும் கட்டலாம்!

அதுதான் மிஞ்சும்!

ஆனுல், யார் இந்த காமராசரும் இந்தத் திருக்கூட்டமும்?

அவரது வளர்ப்பு பத்திரிகைகள் வந்த கதை என்ன?

அதற்கு முதலில் போடப்பட்ட மூலதனம் எவ்வளவு?

அந்த மூலதனத்தைப் போட்டவர் யார்?

ஏன் போட்டார்கள்?

போட்டதன் மூலம் அவருக்கு என்ன கிடைத்தது?

நான்கு நாட்களுக்குள் பதில் சொல்லட்டும் தனுஷ்கேடிகள்.

இல்லையேல் விவரங்களை நான் சமர்ப்பிக்கிறேன்.

1967 பொதுத்தேர்தலுக்கு ஒரு மாதத்திற்குமுன் தமிழ்நாடு காங்கிரசின் கணக்கில் வரவாகியிருந்த தொகை சுமார் 34 லட்சம் ரூபாய்.

இந்த தொகை வந்தவழி எது? அந்தவழி ஸ்ரீ கண்ணப்பெருமான் கட்டளைக்கு ஏற்ப சத்திய பூர்வமாக வந்த வழியா?

எந்தெந்த வழிகளில் வந்ததென்று அன்றைய த. நா. கா கட்சி தலைவர் விளக்கம் சொல்லட்டும்.

இல்லையேல் ஜில்லா வாரியாகப் பணம் கொடுத்து பலன் பெற்ற பஸ் அதிபர்களின் பட்டியலை நான் சமர்ப்பிக்கிறேன்.

**கவிஞர் கண்ணதாசன்**

காமராசர் ஆட்சிக் காலத்தில் விருதுநகர், சிவகாசி வட்டாரத்திற்கு மட்டும் தரப்பட்ட சலுகைகள் உண்டா, இல்லையா?

தன்னிடமிருந்த ஒரு மந்திரியின் மூலம் சென்னையில் உள்ள ஒரு பெரிய பஸ் கம்பனிக்குத் தொழில் லைசென்சுகள் வழங்குவதில் கடைப் பிடித்த முறை நேர்மையானதா?

பதினேரு துணைப் பொருள்கள் தயாரிக்கும் பதினேரு கம்பெனிகளுக்கான லைசென்சை ஒரே அதிபருக்குத் தந்த மர்மம் என்ன?

காமராசரின் கூடவே இருந்து நல்ல 'சேவகராக' விளங்கும் ஒரு பழைய காங். பாலாமணிக்கும் அவருக்கும் உள்ள உறவுகள் என்ன?

அதிலே தொழில் விஷயம்; பொருள் விஷயம் ஒன்றுமே இல்லையா?

**சிண்டிகேட் யோக்கியர்களே பதில் சொல்லுங்கள்!**

கலைஞர் மீதும் அவரது நண்பர்கள் மீதும் களங்கம் சுமத்த வந்த உத்தமர்களே!

கலைஞரின் இதயம் எல்லோருக்கும் சொந்தமாக விளங்குகிறது!

அந்தரங்கத்தில் சொந்த ஜாதியை மட்டும் நேசிக்கும் ஜாதி அபிமானியாக அவர் விளங்கியதில்லை. அதனுல்தான் காமராசர்களை விடப் பலமடங்கு உயர்ந்து மேலே நிற்கிருர்! ஆனுல் காமராசரின் நிலை என்ன?

உலகத் தலைவராக உயர்ந்து, கழகத் தலைவராக மாறி அதன் மூலம் உள்ளூர்த் தலைவராக உருண்டு விழுந்து, இப்போது மனம், மெய், வாக்கு, காயத்தால் மகாஜன சங்கத் தலைவராக மாறி வருகிருர்.

இன்னும் அவர் சுருண்டு படுக்காமலிருக்க வேண்டுமென்ருல், உங்கள் வாலைச் சுருட்டிக்கொள்ளுங்கள்.

இல்லையேல் நீளும் அந்த வாலை ஒட்ட அறுப்பேன்!

அது என்னுல் முடியும்!

அதுவும் உங்களுக்குத் தெரியும்!

★



# நந்திக்கலம்பகத்தில் அழகு!

புலவர் தி. நா. அறிவுஒளி

புலவர்களும், கலைஞர்களும் அழகின் அடிமைகள்: அழகுப் படைப்புகளின் தலைவர்கள்! அழகு வழிபாடே கலைத் தொண்டு. சான்றோரின் வாழ்க்கை, அழகு வாழ்க்கை. அழகுணர்ச்சியைச் சுவைத்துண ரும் ஆற்றலை யார் அடைகிறார்களோ, அழகைச் சுவைக்கும் கலையார்வத்தை யார் பெற்று விடுகிறார் களோ; அழகைப் படைக்கும் ஆற்றலை யார் எய்து கிறார்களோ அவர்களே கலைப் புலவோர் ஆவர். அவர் களே சுவையுணரும் ஐம்புலச் செல்வர்கள். அழகாட்சி யாளர்கள். உலக வாழ்க்கையை வெற்றியோடு ஆற்றக் கற்றவர்கள். அழகுச் சுவையுணர்வு இல்லா மல் எவனும் கலைஞனாகவோ. இலக்கியப் புலவ னாகவோ ஆக வியலாது. புலவோர் அழகுப் பித்தர் கள்! பாவலர் இயற்கை மடியில் வளரும் எழுச்சிக் குழந்தையர். இயற்கையைச் சுவைப்பதும் இயற்கை யோடு ஒன்றி உறவாடுவதும், அதை விளக்கிப் பாடுவதுமே கலைஞர் வாழ்க்கை! கலம்பகப் புலவர் இயற்கை எழிலில் மூழ்கித் திளைத்தவர்; அதனைப் பாட்டோவியந் தீட்டியவர், இயற்கையைப் பாடு வதில் ஒரு மிடுக்குண்டு. குழைவையும் கனிவையுங் கூட்டிக் கலந்தே இயற்கை யழகைப் புலவோர் காட்டுவர். இவர் செம்மாப்பு செறிந்த மிடுக் குணர்ச்சி பொதுளப் பாடியுள்ளார்.

"குருகுதிர் முன் பனிக்கொதுங்கிக் கூசும் கங்குல்
குளிர்திவலை தோய்ந்தெழுந்த நறுந்தண்வாடை
அருகுபனி சிதறவர அஞ்சு வாளை
அஞ்சல் அஞ்சல் என்றுரைத்தால் அழிவ
துண்டோ? (நந்தி-8)

நீரில் வாழும் பறவைக் கூட்டங்களும், மிகுந்த பனித் திவலையால் உடல் நடுங்கி வருந்தக் கூடிய நள்ளிரவில் பனித் துளி சேர்ந்த, மேலெழும்பி வீசும் மணங் கமழும் குளிர்ந்த வாடைக் காற்று, தம் பக்கத்தில் பனித் துளிகளைத் தூற்ற வருவதை யறிந்து தலைவி அஞ்சுகிறாள்.

"பொய்கைகளில் பூத்துள்ள செங்கழுநீர்ப் பூக்க ளையும், ஒளிரும் பூம்பொழிலில் நிறைய மலர்ந்துள்ள சண்பக மலர்க் கொத்துகளையும் தழுவித் தடவி யோடி, மற்ற சோலைகளிலுள்ள அழகிய கமுகம் பாளைகளை மோதி மகிழ்ந்து மணம் பெற்று இனிமை யின் வடிவமான குளிர்ந்த தமிழ் நாட்டுத் தென்றல் காற்று சோழ நாட்டு நகர்களின் உட்பகுதிகள் எங்கும் சென்று உலவித் திரிகின்றது." எனச் சோழ நாட்டு இயற்கைச் செழுமையும், தென்றலின் திரு விளையாடலையும் சிறப்பித்து,

"உண்டிரையின் செங்கழுநீர் இலஞ்சி மாடே
ஒண்பொழிலில் சண்பகத்தார் தடவி ஓடித்
தண்டலையில் பூங்கமுகம் பாளை தாவித்
தமிழ்த் தென்றல் புகுந்துலவுந் தண்சோ
ணாடா!" (நந்தி ; 78)

எனப் பாடியுள்ளார்!

கடல்மல்லை (மாமல்லபுரம்) நகரக் கடற்கரைப் பகுதியினைக் கழக இலக்கிய மரபு தழுவி விளக்கு கிறார் கலம்பகப் புலவர்.

"கீழ்க் கடலினின்றும் அளவற்ற வாடைக் காற்று வீசுகிறது. அவ்வாடை உப்பங் கழியின்மீது உலாவுகிறது. அக்கழிகளில் வாழும் நாரைகள் குளி ருக்கு அஞ்சிப் பக்கத்திலுள்ள பனைமரங்களின் மடல் களில் சென்று நிறையத் தங்குகின்றன.

நீரிலேயே வாழும் நாரைகளுக்கே வாடைக் குளிர் தாங்கரும் வாட்டமளிக்கிறதென்றால், மக்க ளுக்கு எவ்வளவு வருத்தம் செய்யும்! காதலரைப் பிரிந்து தனித்து வாடும் காதலியர்க்கு எவ்வளவு துன்பந் தரும்!—நம் கற்பனை விரிவதற்கு வாய்ப் பளித்துப் புலவர் பாடலை நல்கியுள்ளார் :

"கடற் கூதிர் மொய்த்த கழிப்பெண்ணை நாரை
மடற் கூறு தோறும் மலி மல்லை........."
(நந்தி: 77)

சில சொற்களால் நுண்மையாக இயற்கையை விளக்கும் புது ஆற்றல் கலம்பகப் பாவலரின் ஓவியத் திறமையைத் தெள்ளென விளக்குகிறது!

அழகில் பேரமைதி குடிகொண்டிருக்கிறது. அழகை யுணருவதற்கும் துய்ப்பதற்கும் உயரிய மனப் பண்பாடு வேண்டும். நல்ல அழகின் ஆற்ற லையும், அருளையும் தெளியவர் அரியர். எந்த எழில் உயிரினத்திற்கு ஆறுதலையும் இன்பத்தையும் அளிக் குமோ அதனையே சான்றோர் பாடினர்; வாழ்த்தினர்; போற்றினர்!

எது மிக மிக ஒள்ளிய மேன்மையான அழகோ; எது உலகை மறக்கச் செய்து உணர்வு விருந்தாகும் அழகோ; எது தன்னை மறந் தின்பமுறச் செய்யும் அமிழ்தமையலாக விளங்கும் அழகோ; எது எல்லாங் கடந்து ஏரார் ஒளி வீசி உள்ளத்தின் வேரை ஈர்த்து இயக்கும் அழகோ; அதுதான் புலவர் உள்ளத்திலே புதுமையாக்கத்தைப் பூக்கச் செய்யும் பொற்பழ காகும்!

அழகில் இயற்கையின் ஒட்ப நுட்பமெல்லாங் கண்டு கள்வெறி கொண்டு கற்பனை வானிலேறிக் கனவுக் கலையுலகில் திரிந்து புதுமைப் படைப்புகளை ஆக்கித் தருவது அழகுக் கலைஞரின் பழகு முறைமையாம்.

இயற்கையே அழகு வடிவினதாம். அழகின் கவினின்பத்தைத் தாமும் விருந்துண்டு, பிறர்க்கும் எடுத்தூட்டி மக்களனைவரையும் முருகுணர் வின்பம் பெறவைக்கும் பெருந்தகையர் கலைப் புலவர்களே யாவர்.

அழகு ஆக்க முயற்சியில் வெற்றி பெறுங் கலைஞன் வேறு எதில் தோல்வியுற்றாலும், அவன் வெற்றியாளனே. கலம்பக ஆசிரியர் அழகுணர்ச்சி மிக்கவர். அழகை விளக்கிப் பாடுவதில் தனியார் வலர்; நுண்ணழகை மட்டுமின்றிப் பருப்பொருளழகையும் பலவாறு பாராட்டிப் பாடியுள்ளார். இவர் அழகை விளக்கும் அழகே ஒரு தனி யழகு! பெண்களின் அழகு கண்களுக்குக் கலைவிருந்து! பெண்ணழகைப் பேசாத புலவர் இலர். உலகப் பாவலர், கலைஞர் எல்லாரும் பெருமிதம் மிக்க கவர்ச்சி சான்ற பெண்ணழகைப் பேணிப் பாடி மகிழ்ந்துள்ளனர். கலம்பகப் பாவலர் பெண்ணழகு வண்ணனையில் சீரும் சிறப்பும் சில்வகைச் சொல்லால் பல்வகை நலங் காட்டும் நயமும் வாய்ந்து விளங்குகின்றார்.

"..........................................
கொடுவார் புனைந்து நகுவாள் படைக்கண்
மடவார் இடைக்குள் மனமே
வடுவா யிருக்கும் மகளே, முன்றில்
மணியூசல் ஆடல் மறவே." (10)

'கச்சைக் கொங்கை மீதணிந்து அழகொப்பனை செய்திருப்பதோடு ஒளிர்கின்ற வாளைப் போன்ற கண்களையும் கொண்ட இளமங்கையர் குழாத்துள் மனம் வடுப்பட்டு விளங்கும் மகளே!'—என்று விளிக்கும் பகுதி பெண்ணழகைப் புனையா ஓவியமாகத் தீட்டிக் காட்டுகிறது.

"அன்னம் போன்ற அழகிய நடை நடப்பவளை, பெரிய இன்ப உறுப்புடையவளை, அகன்ற வானில் உள்ள முகிலினிடை தோன்றும் இயற்கையான மின்னலையும், மெலிய வைக்கும் கவர்ச்சி மிக்க ஒளி மென்மைத் தோற்றமுடைய எழிலாளை, நூலைப் போன்ற நுண்ணிடையாளை, மயில்களா சாயலுக்கு ஒக்கும்?" என்று—

"அன்ன நடையாளை அல்குல் பெரியாளை
அங்கை அகல்வான்
மின்னை மெலிவாளை நூலின் இடையாளை
நேர்வ மயிலே?" (28)

என்ற பாடலடிகளில் நனிநயம் சொட்டச் சொட்டப் பாடுகிறார்.

அறிவைக் கொள்ளை கொள்ளுமளவிற்கு ஒளியழகு மிக்க நல்லவர்கள் அவ்விளம் பெண்கள். அப்பெண்டிருள்ளும் எழிலோவியங்கள் எனப் பிறரால் புகழ்ந்து கூறப்படுகின்ற பெண்களிலும் தலைவியைப் போன்ற ஓர் உவமை கடந்த அழகி காணக்கிடைப்பாளா? அழகான முத்துகளின் ஒண்மையைக் கவர்ந்துள்ள பற்கள் விளங்கும் தன் முகத்தைச் சற்றே சாய்த்து நாணி நின்று, மென்மைத் தன்மையுடைய மலைபோன்ற மார்புகளைக் கொண்ட மின்னற்கொடி போன்ற அழகிக்கு இணையாவாரை ஆராய்ந்து ஆராய்ந்து பார்த்தாலும் யாண்டும் இருக்க முடியுமா? இயலாது" என்று புலவர் ஓர் அழகுக் குவியலை விளக்குகிறார்:

"... ... ... ... ... ... ... ...
புலம்கொள் ஒளிய நல்லோர்க்கும்
புகலின் றோர்க்கும் பொன்னாரம்
நலங்கொள் முறுவல் முகஞ்சாய்த்து
நாணுநின்று மெல்லவே
விலங்கல் வைத்த மின்னேக்கின்
மேலும் உண்டோ வினையேற்கே." (ந.க.36)

அவன், அவள் காதலன்! காதலியின் ஒவ்வொரு அழகும் காதலனுக்கு வியப்பளிக்கிறது. தன்னுள்ளத்தோடு அவன் கூறுகிறான்:

"ஒளியுமிழும் இலைவடிவத்தில் அமைந்த வேல் போலும் கூரிய நோக்குடைய கண்களையுடையவள் காதலி. பல்லவனின் திருமயிலை (மயிலாப்பூர்) போன்ற சிறப்பும் கவர்ச்சியும் உடையவள். அவள் பூங்கொடி போன்ற சிற்றிடை இருக்கிறதா? இல்லையா? இது புரியாத புதிராக இருக்கிறது. ஆனால் ஆராய்ந்து பார்த்தால், இடை இருக்கவே இருக்கும் என்று நம்பலாம். ஏன்? 'இடை' என்ற பகுதி இல்லாமலிருக்குமானால், இளமையும் கவர்ச்சியும் உருவப் பொலிவுமுள்ள அழகார்ந்த கொங்கைகள் மார்பில் விளங்க முடியுமா? ஆகவே அவளுக்குக் கட்டாயம் இடை இருக்கும்!

எப்படி தலைவனின் தீர்ப்பு? அறிவியல் ஆய்வாளரைப் போன்று காரணங்களைத் தேர்ந்து காரியத்தை முடிவு செய்யும் முறை பாட்டுக்குத் தனிக் கவர்ச்சி தருகிறது.

"உளமே, கொடி மருங்(கு) உண்(டு);இல்லை என்னில்,
இளமுலைகள் எவ்வா(று) இருக்கும்?—கிளர் ஒளிய
தெள் இலைவேல் கண்ணினுள் தெள்ளாற்றில்
[வென்றகோன்
தன்மயிலை அன்னாள் தனக்கு." (ந : 56)

[பாவில் 'மயிலை' என்ற சொல் 'மயிலைப்போன்றவள்' என்ற பொருளும் பயக்குமாறு பெய்துள்ள திறம் கவனித்தற்குரியது.]

முதலடியில், காதலியின் 'கொடி போன்ற இடை உள்ளமே' என்று பொருள் கொள்ளுமாறும் அமைந்துள்ளது. 'உள்ளம் உண்டா? இல்லையா?' என்று ஐயம் கொள்ளுமாறு, கட்புலனுக்குத் தெள்ளத் தெளிவாகத் தெரியாமல், உணரப் புலனாவதுபோல இடையும் கண்ணுக்குப் புலனாகா அளவு நுண்ணியதாகவும், நெஞ்சுணர்வுக்குப் புலனாகும் அளவுக்கு உய்த்தறியக் கூடியதாகவும் அமைந்தது' என்று பொருள்பட பாவியற்றிய திறம் வியப்பிற்குரியது.

இன்னொரு அழகியின் "தமிழழகை"க் காட்டுகிறார் புலவர். "அவள் வாய் செந்நிறமானது; கண்கள் கரியநிறமானவை; எழில்மிகு கொங்கைகள் பருத்துத் திரண்டுருண்டு உருவாகியமையால் அவள் சிற்றிடை முறியும் நிலையிலுள்ள கொடி போன்றுள்ளது; அல்குல் நனிமிகு எழில் வாய்ந்தது; ஒளி வீசும் அணியான மேகலை அதன்மீது விளங்குகிறது; தேன் பிலிற்றும் பூக்களைத் தன் கருங்குழலில் செறித்துள்ளாள், அக்குழலோ முகில் போன்றது. இவ்வளவு சிறப்பார்ந்த அழகியை யாவரும் விரும்புவதியல்பு தானே?

"செய்யவாய் மிகக் கரியகண் வனமுலை
செறிந்து இறு மருங்குல் கொம்பு

ஐய சாலவும் அவிர் இழை அல்குல் அம்
  மதுமலர்க் குழல் என்ருல்
வெய்ய....................." (ந. க ; 51)

முதலடியில் "மிகக் கரிய கண் வனமுலை" என்பதை ஒரு தொடராகக் கொண்டும் பொருள் காணுமாறு சுவைபட யாப்பமைத்த புலவர் திறம் நனி பெரிது!!

சுருங்கச் சொல்லி மகளிர் பேரழகை விளங்க வைக்கும் பாவலர் பாத்திறம் நூல் முழுதும் உள்ளது.

"தார்வட்டக் கிளிமருவும் சொல் பகர்
  தளர் இடை தையல் வஞ்சி......" (58)
"வரமயில் போற்றுசாயல் வாள்நுதல் சேடி" (62)
"...மல்லையின் மயில் அன்ஞள்-
விட்ட கூந்தலும் விழியும் நன்முறுவலும்
  நுதல் இசை இடுகோலம்
இட்டபொட்டி ஞே(டு) இளமுலைப் போகமும்
  எழுதவும் ஆகாதே! (79)

அழகைப் போற்றும் அறிஞரான கலம்பக ஆசிரியர் சில பாக்களில் தம்மையே மறந்த புலமை வெறியின் உச்சிநின்று பாடுகிருர். அழகின் ஈர்ப்பில் அப்படியொரு மனமயக்கம்! பாவலனின் உள்ளுணர்வும் உயிர் ஒன்றலும்தானே பாட்டில் வடிக்கப் பெறுகிறது! தன்னுணர்வுச் செறிவு எப்போது கோவில் கொள்ளுகிறதோ; அப்போது புலவன் புரியும் படைப்பு ஒப்பற்றுத் திகழ்வதில் என்ன வியப்பு?

"கோவைப்பழம்போற் சிவந்து அழகும் ஒளியும் மிக்க முகத்தில் பூத்துப் பவளவாய் அவளுக்கு அமைந்துள்ளது. பக்கங்களில் துவண்டு அசைகின்ற பூங்கொடிபோல இடை அமைந்துள்ளது. அழகுச் சிரிப்பைப் பூக்கும் பற்கள் முத்துகள்போல மின்னுகின்றன. கருங்கூந்தல் மிகவும் அடர்ந்துள்ளது. [போலிமயிரைப் போற்றி யணியும் மகளிர் இவள் மீது பொருமைப்படலாம்!] நீண்ட விழிகள் கருங்குவளைப் பூக்கள் போன்றுள்ளன. வளை பூண்ட தோள்கள் மூங்கிலைப் போன்றவை. இரு கொங்கைகளும் ஒன்ருேடு ஒன்று மிக நெருங்கி விம்மிப் பார்ப்பவர்தம் ஆவலைத் தூண்டுபவையாக எழில் காட்டுகின்றன. புருவ வில்கள் வளைந்துள்ளன. இத்தனை எழிலையும் பயன்படுத்தி நம்மை அப்பெண்டிர் காதலுணர்வு கிளர்ந்தெழச் செய்து, ஆருத் துன்ப ஏக்கத் தீயை உள்ளத்தே வளரச் செய்து விட்டனர். இதனை எப்படிப் பொறுத்தல் இயலும்?"

—என்று தலைவன் ஆற்ருமை யுணர்வு துடிக்க அழகை அழகாகப் புனைகின்ற அழகுப் பாட்டு:-

"அறம் பெருகும் தனிச் செங்கோல் மாயன்
  தொண்டை
அம்கனிபோல் சிவந்துதிரு முகத்துப் பூத்து
பறிந்துளதே பவளவாய் மருங்கில் ஆடும்
வல்லியிடை மணிமுறுவல் முத்துச் சால
நெறிந்துளதே கருங்குழலம் குவளை கண்கள்
நெடியவேய் தொடியதோள் நேர்ந்து வெம்மை
செறிந் துளவே முலைசிலையே புருவம் ஆகி
அவர்நம்மைச் சிந்தைநோய் திருத்திஞரே."
  (ந: 64)

உரையில் பாட்டின் பொருளை அடக்க முயன்ருலும், பாட்டின் அழகை — உணர்ச்சி யாற்றலை முழுதும் செறித்தமைக்க இயலவில்லை. பாட்டின் ஆற்றலே இங்குதான் அமைந்துள்ளது. பாட்டு காலம் வென்று வாழ்வதன் நுட்பம் இதுவே.

கோடி முறை பாடுப் பாடிச் சுவைத்தாலும் நம்முள்ளம் ஆறவில்லை; இனிமை தெவிட்டவில்லை; போதுமென்ற ஆறுதல் உண்டாகவே இல்லை. வேட்கையை மூட்டி மேன்மேலும் வளர்த்துக்கொண்டேயிருக்கின்றது. நவில்தொறும் நயந்தகும் தமிழ்ச் சுவை நம்மைப் பிணித்து ஈர்க்கிறது.

உலகில் புறஅழகைப் பழித்துக் கூறும் கருத்து சிலரால் கூறப்படுகிறது. இது ஒருவகை உண்மையை வற்புறுத்த எழுந்தது. புறஅழகை மட்டுமே போற்றுபவரைத் திருத்தவும், அவர்தம் கொள்கை செவ்விதன்றெனநிலைநிறுத்தவும் எழுந்தது.

அழகு புறத்தும், அகத்தும் ஒருசேர இன்றியமையாதது. புறஅழகையும் போற்றுவர் தமிழ்ப் புலவோர்; அகஅழகையும் போற்றுவர் தமிழ்ச் சான்ருேர். தமிழர் நாகரிக மாண்பில் இத்தகு இயல்பு குறிப்பிடத்தக்க பொதுமை நோக்குடையதாகும். உருவமில்லாமல் உருவமற்ற நுண்மை அமைவதும், உருவத்தோடு உருவமில்லா பருமை அமைவதும், நுண்ணுருவோடு பருவுரு வமைவதும், பருவுருவோடு நுண்ணுரு வமைவதும் உலகியல்பே. இவை யுணர்ந்து நுண்ணழகையும், உருவழகையும் ஒரு மதிப்போடு பாராட்டிப் போற்றுவதே சீரிய புலமை யுணர்வாம். கலைதேர் புலவரியல்பு யாண்டு அழகு கிடப்பினும் போற்றுவதேயாம். இந்நிலையில், மெய்யுணர்வுக் கொள்கையையும்; அறிவியல் கொள்கையையும் ஒருமையுறச் செய்து இயைபு படுத்திய தமிழ்ப் புலவோர் மேதைமைத் தொண்டு உலகம் வியக்கத்தக்கதாகும்.

பருப் பொருளில் வெளிப்படும் அழகு என்ற ஒப்பற்ற பொருள் அப்போதைக் கப்போது நிலையாமை பெறுவது இயல்பே. அழியும் பொருள்களிலும் அழியா இயல்பும், அழியா இன்பமும் உள்ள உண்மையைத் தமிழ்க் கலைஞர் தெள்ளிதின் உணர்ந்திருந்தனர்.

அழகு என்பது என்ன? ஒழுங்கான முழுமை—இலக்கண ஒருமை—நிறைவின் தெளிவு - இதுதானே அழகு! எது எப்படி இருக்க வேண்டுமோ: அது அழகாகும். தமிழ்க் கலைஞர் தெளிவோடு தேர்ந்த அழகுச் சுவை உலக மாறுதல்களை யெல்லாம் கடந்த தகுதிப்பாடு உடையது!

மேற்பாட்டில் ஓசைச் சிறப்பும், மொழி ஓட்டமும், இழுமென் சொற்களின் ஒழுகிய அமைப்பும், பண் கனிந்தொழுகும் இசை நயமும் அமைந்து பாட்டின் முழு உருவமும் அழகாக ஈடிணையற்று விளங்குகிறது. அழகுச் சுவை சொட்டச் சொட்ட காதற்சுவை முட்ட முட்டப் பாட்டை ஆசிரியர் கையாண்ட பான்மை வியப்பாண்மைக் குரித்து. சொற்கள் உயிர்ப்போடு உணர்ச்சிக் கொந்தளிப்போடு துள்ளித் துள்ளிக் கூத்திடுகின்றன. ஃ

ஆசிரியர் வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3
86, திருக்கச்சிநம்பித் தெரு, அல்லி அச்சகத்தில்